நறள் நானூறு

மூலம் உரை மொழிபெயர்ப்பு

அ. மாதவையர்
பதிப்பித்தன

மறைமலையடிகள்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

சென்னை — மயிலாப்பூர்
பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு

அணு 4; 6 ;8] 1925 [காபிரைட்

ஸ்ரீ அ. மாதவையர் புஸ்தகங்கள்

பத்மாவதி சரித்திரம்—5-ம் பதிப்பு-ரூ 2-0-0.
விஜய மார்த்தாண்டம்—2-ம் பதிப்பு-ரூ 1-4-0.
உதயலன்—2-ம் பதிப்பு - 0-12-0.
முத்து மீனாக்ஷி—2-ம் பதிப்பு
சித்தார்த்தன் - 0-12-0.
திருமலை சேதுபதி
(2-ம் பதிப்பு அச்சில்) 0-8-0.
பாரிஸ்டர் பஞ்சநதம் - 0-6-0
பொது தர்ம சங்கீத மஞ்சரி - 0-4-0.
பாலராமாயணம் - 0-12-0.
பாலவிநோதக் கதைகள்-0-4-0.
புதுமாதிரிக் கல்யாணப் பாட்டு—
2-ம் பதிப்பு-0-2-0.
ஆசாரச் சீர்திருத்தம்-0-2-0.
தக்ஷிண சரித்திர வீரர் (அச்சிலிருக்கிறது)
குறள் நானூறு — மூலமும் உரைகளும் மொழி பெயர்ப்பும்—சாதாரண பிரதி—1 அணா; டக்லீன் பைண்டிங் —6 அணா; காலிகோகில்ட்—8 அணா

பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு
மயிலாப்பூர், சென்னை

பஞ்சாமிர்தம்

சித்திரப்படங்களோடு கூடிய
மாதப் பத்திரிகை
பத்திராதிபர்—அ. மாதவையர்
1924 சித்திரைமீ தொடங்கி
இதுவரை வெளி வந்துள்ள
பத்துச் சஞ்சிகைகளில்
888 பக்கங்களும்
130 சித்திரப்படங்களும்
மிகப்பல கட்டுரைகளும்
வியாசங்களும் கதைகளும்
பாட்டுக்களும் பிதிர்களும்
வேடிக்கை விநோதங்களும்
பேரறிவாளர் பலரால்
எழுதப்பட்டுள்ளன

வருஷச்சந்தா-5 ரூ   தனிப்பிரதி-8 அணா

பொருள் அடக்கம்

முகவுரை ௬

திருக்குறள்—

பால் இயல் அதிகார அட்டவணை ௮

குறள் நானூறு—

,, மூலமும் உரைகளும் மொழி பெயர்ப்பும் 1

,, செய்யுள் முதற் குறிப்பு அகராதி 107

முகவுரை

“எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்”

என்ற திருக்குறள் செய்தவர் திருவள்ளுவர் என்பர். அவர் தாய் தந்தையரின் குலம் பெயர்கள், அவர்கள் அவருக்கிட்ட பெயர், அவர் பிறந்து வாழ்ந்து இறந்த காலம் ஊர்கள், ஒன்றுமே நிச்சயமாகத் தெரிந்திலது. மயிலாப்பூரிலே அவருக்கு ஒரு பழைய கோயி லிருக்கிறது. அவர் ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று மாத்திரம் கூறலாம். பின்வரும் மூன்று வெண்பாக்களும், அவர்க்கும் அவரியற்றிய நூலுக்கும் வழங்கும் பப்பத்துப் பெயர்களையும், அந்நூற்கு உரை எழுதிய பதின்மர் பெயர்களையும், முறையே குறிப்பன.

“தேவர், பொய் யில் புலவர், தெய்வப் புலவர், பெரு
நாவலர், நாயனார், நான் முகனார்,—(மேவு) முதற்
பாவலர், மாதாநு பங்கி, செந் நாப்போதார்,
(ஆவ) திருவள்ளுவர் பேரால்” †

“(ஆய) தமிழ்மறை, பொய் யாமொழி, தெய்வநூல்,
வாயுறை வாழ்த்து, திரு வள்ளுவர்,—(மேய)முப்பால்,
(உள்ளு) பொதுமறை, உத்தரவே தம், திரு
வள்ளுவப்ப யன், குறள், (நா மம்). †

† வெ. ப. சு.

முகவுரை

" தருமர், மணக்குடையர், தாமத்தர், நச்சர்,
பரிமே லழகர், பரிதி,—திருமலையர்,
மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், (வள்ளுவர்நூற்
கெல்லைஉரை செய்தார் இவர்).

பரிமேலழகர் உரையே இக்காலத்தில் மிக்கு வழங்குவது.

திருக்குறள், மனிதப் பிறவியினர் பெறுதற்குரிய அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பேறுகளையும் பற்றி, 133 பதிகங்களில், 1330 குறள் வெண்பாக்களாற் கூறுகின்றது. இவற்றுள் 14 பதிகங்கள் துறவறவியலைப் பற்றி யிருப்பதால், மோக்ஷம் உட்படப் புருஷார்த்தங்க நான்கினையும் அது கூறுகிற தென்னலாம்.

ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமா சொற்களிற் சுருக்கமாகக் கூறும் இந்நூல், இக்காலத்து தமிழ் மக்களால் பாராட்டப்படும் அளவு பயிலப்படாத பரிதாபமாயினும் வியப்பன்று. நூல் கிடக்க, பரிமேலழ உரையே, சாமானியர்க்குப் பயன்படாது. இந்நூலி சிறந்த சில செய்யுள்களையேனும் தமிழர் எல்லோரும் படி துப் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, எளிய வாய் இனியனவாய் காலத்துக் கேற்றனவாய்ச் சிலநூ சிறந்துள்ள குறள்களைப் பொறுக்கித்தருமாறு அறிவா

சிலரை வேண்ட, அவ்வாறே அவர்கள் * என்பால் அன்பு கூர்ந்து குறித்துதவினவே இந்நானூறும். இவர்களுக்கெல்லாம் என் மனமார்ந்த வந்தனங்கள் உரியன.

இங்ஙனம் பொறுக்கித் திரட்டிய 400 குறள்களுக்கு எளிய நடையில் கருத்துரையும், அருஞ்சொல் விளக்கமும், தற்காலத்துக் கேற்க இங்கிலீஷில் கருத்துரையும் எழுதிச் சேர்த்துள்ளேன். இவற்றை எழுதுவதிலும், பின்னர் அச்சுப் பிழை திருத்துவதிலும், எனக்குத் துணை நின்ற எனது நண்பர் Rev. F. கிங்ஸ்பெரியின் பேருதவியையும், அச்சேறிய முதற் பிரதிகளைப் படித்துப் பார்த்துத் திருத்திய எனது பழைய நண்பர் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியாரின் பேருதவியையும் பற்றி,

---

* அவர்களாவார்:–(1) ஸ்ரீமதி மங்களம்மாள் (லேடி சதாசிவையர்) (2) திவான்பகதூர் சரவணபவானந்தம்பிள்ளை–பண்டிதர் பத்மநாபையர் (3)Dr. A. J. அப்பாசாமி (4) ஸ்ரீலஸ்ரீ இலக்குமணப் போற்றிகள் (5) Dr. L. P. லார்ஸன்–பண்டிதர் G. S. துரைசாமி பிள்ளை (6) பண்டிதர் அ. கோபாலையர் (7) Rev. H. A. பாப்லி (8) ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் (9) Rev. F. கிங்ஸ்பெரி. பஞ்சாமிர்தம் பத்திரிகை–I-8–(கார்த்திகைக் காசு) 697–698-ம் பக்கங்களைப் பார்க்க.

" இனையர் இவர் எமக் கின்னம் யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு "

என்னும் பொய்யாமொழியை நினைந்து, அதிகம் கூறிலேன்.

கருத்துரை எழுதுவதில், பரிமேலழகர் உரையைவிட்டு இரண்டோரிடங்களில் விலகி யிருப்பதற்கும்; அதிகார முறைமைக்கிணங்க அவர் பொருள்வரையறுக்கும் எல்லையை மீறி, மூலபாடம் எற்குமளவு பொருளை விரித்திருப்ப தற்கும்; இந்நூலிற் காணும் குறை குற்றங்களுக்கும்; முடிவாக 400 குறள்களைப் பொறுக்கியதற்கும், யானொருவனே பொறுப்பாளி.

" குணம்நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல்."

அ. மாதவையர்.

திருக்குறள்

பால் இயல் அதிகார அட்டவணை.

அறத்துப்பால்

பாயிரம்

௧. கடவுள் வாழ்த்து
௨. வான்சிறப்பு
௩. நீத்தார் பெருமை
௪. அறன் வலியுறுத்தல்

இல்லற இயல்

௫. இல்வாழ்க்கை
௬. வாழ்க்கைத் துணைநலம்
௭. புதல்வரைப் பெறுதல்
௮. அன்பு உடைமை
௯. விருந்தோம்பல்
௧௦. இனியவை கூறல்
௧௧. செய்ந்நன்றி அறிதல்
௧௨. நடுவு நிலைமை
௧௩. அடக்கம் உடைமை
௧௪. ஒழுக்கம் உடைமை
௧௫. பிறன் இல்விழையாமை
௧௬. பொறை உடைமை
௧௭. அழுக்காறாமை
௧௮. வெஃகாமை
௧௯. புறங்கூறாமை
௨௦. பயனில சொல்லாமை
௨௧. தீவினை அச்சம்
௨௨. ஒப்புரவு அறிதல்
௨௩. ஈகை
௨௪. புகழ்

துறவற இயல்

௨௫. அருள் உடைமை
௨௬. புலால் மறுத்தல்
௨௭. தவம்
௨௮. கூடா ஒழுக்கம்
௨௯. கள்ளாமை
௩௦. வாய்மை
௩௧. வெகுளாமை
௩௨. இன்னாசெய்யாமை
௩௩. கொல்லாமை
௩௪. நிலையாமை
௩௫. துறவு
௩௬. மெய் உணர்தல்
௩௭. அவா அறுத்தல்
௩௮. ஊழ்

பொருட்பால்

அரசியல்

௩௯. இறைமாட்சி
௪௦. கல்வி
௪௧. கல்லாமை

பால் இயல் அதிகார அட்டவணை

௪௨. கேள்வி
௪௩. அறிவு உடைமை
௪௪. குற்றம் கடிதல்
௪௫. பெரியாரைத் துணைக் கோடல்
௪௬. சிற்றினம் சேராமை
௪௭. தெரிந்து செயல்வகை
௪௮. வலி அறிதல்
௪௯. காலம் அறிதல்
௫௦. இடன் அறிதல்
௫௧. தெரிந்து தெளிதல்
௫௨. தெரிந்து வினையாடல்
௫௩. சுற்றந்தழால்
௫௪. பொச்சாவாமை
௫௫. செங்கோன்மை
௫௬. கொடுங்கோன்மை
௫௭. வெருவந்த செய்யாமை
௫௮. கண்ணோட்டம்
௫௯. ஒற்றாடல்
௬௦. ஊக்கம் உடைமை
௬௧. மடியின்மை
௬௨. ஆள்வினை உடைமை
௬௩. இடுக்கண் அழியாமை

அங்க இயல்

௬௪. அமைச்சு
௬௫. சொல்வன்மை
௬௬. வினைத் தூய்மை
௬௮. வினைசெயல்வகை
௬௯. தூது
௭௦. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்
௭௧. குறிப்பு அறிதல்
௭௨. அவை அறிதல்
௭௩. அவை அஞ்சாமை
௭௪. நாடு
௭௫. அரண்
௭௬. பொருள் செயல்வகை
௭௭. படைமாட்சி
௭௮. படைச்செருக்கு
௭௯. நட்பு
௮௦. நட்பு ஆராய்தல்
௮௧. பழைமை
௮௨. தீநட்பு
௮௩. கூடாநட்பு
௮௪. பேதைமை
௮௫. புல்லறிவாண்மை
௮௬. இகல்
௮௭. பகைமாட்சி
௮௮. பகைத்திறம் தெரிதல்
௮௯. உட்பகை
௯ . பெரியாரைப் பிழையாமை
௯௧. பெண்வழிச் சேறல்
௯௨. வரைவின் மகளிர்
௯௩. கள் உண்ணாமை
௯௪. சூது

ஒழிபியல்

௯௬. குடிமை
௯௭. மானம்
௯௮. பெருமை
௯௯. சான்றாண்மை
௱. பண்பு உடைமை
௱௧. நன்றியில் செல்வம்
௱௨. நாணுடைமை
௱௩. குடிசெயல்வகை
௱௪. உழவு
௱௫. நல்குரவு
௱௬. இரவு
௱௭. இரவச்சம்
௱௮. கயமை

காமத்துப்பால்

களவியல்

௱௯. தகை அணங்குறுத்தல்
௱௰. குறிப்பு அறிதல்
௧௧௧. புணர்ச்சி மகிழ்தல்
௧௧௨. நலம்புனைந்து உரைத்தல்
௧௧௩. காதற்சிறப்பு உரைத்தல்
௧௧௪. நாணுத்துறவு உரைத்தல்
௧௧௫. அலர் அறிவுறுத்தல்

கற்பியல்

௧௧௬. பிரிவு ஆற்றாமை
௧௧௭. படர் மெலிந்திரங்கல்
௧௧௮. கண்விதுப்பு அழிதல்
௧௧௯. பசப்புறுபருவரல்
௧௨௦. தனிப்படர் மிகுதி
௧௨௧. நினைந்தவர் புலம்பல்
௧௨௨. கனவு நிலை உரைத்தல்
௧௨௩. பொழுதுகண்டு இரங்கல்
௧௨௪. உறுப்பு நலன் அழிதல்
௧௨௫. நெஞ்சொடு கிளத்தல்
௧௨௬. நிறை அழிதல்
௧௨௭. அவர் வயின் விதும்பல்
௧௨௮. குறிப்புஅறிவுறுத்தல்
௧௨௯. புணர்ச்சி விதும்பல்
௧௩௦. நெஞ்சொடு புலத்தல்
௧௩௧. புலவி
௧௩௨. புலவி நுணுக்கம்
௧௩௩. ஊடல்உவகை

குறள் நானூறு

அறத்துப்பால்—பாயிரம்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கனுள் முதலாவதான அறத்தைப் பற்றிக்கூறுவது. அறம்-தருமம்; பால்—பகுதி ; பாயிரம்-நூல்முகம்.

1. அகர முதல எழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே உலகு. (க-க)

(அதிகாரம்-கடவுள் வாழ்த்து) கருத்துரை. 'அ' என்னும் ஒலி, (பாஷை) ஒலிகளுக்கெல்லாம் முதல்; அது போல, உலகத்துக்குக் கடவுளே முதல்.

'A' is the beginning of all speech; God of the universe.

2. கற்றதனால் ஆய பயன்என்கொல், வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ? (க-உ)

க-ரை. உண்மை அறிவினனான கடவுளின் திருவடி வணங்காவிடின், அறிவை நாடிப் பலகலைகளைக் கற்றதனால் ஆகிய பயன் என்ன ? வால்-மிகுதி, சுத்தம் ; தாள்-பாதம்.

If one worships not the All-knower, of what avail is learning?

3. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (க-எ)

க - ரை. ஒப்பில்லாத கடவுளின் திருவடி அடைந்தவரே யன்றி, வேறெவரும் தம் மனக்கவலைகளை நீக்கிக் கொள்ளுதல் முடியாது.

Only they are free from care who take refuge in God.

4. விண்இன்று பொய்ப்பின், விரிநீர் வியன்உலகத்
துண்ணின் றுடற்றும் பசி. (உ-ங)

(அதி-வான் சிறப்பு) க - ரை. மழை பெய்யாது பொய்த்தால், உலகத்திலே உயிர்களைப் பசி வருத்தும். வான்-விண்; விண்-மேகம், மழை; விரி நீர்-கடல்; வியன்-அகன்ற; உண்ணின்று-உள்நின்று; உடற்றல்-வருத்துதல்.

Without rain all lives will suffer from hunger.

5. கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம், எல்லாம் மழை. (உ-ரு)

க - ரை. வேண்டியபோது பெய்யாமலும், அளவுக்கு மிஞ்சிப் பெய்தும், கெடுக்கவும்; வேண்டியவாறு பெய்து, கெட்டவரைக் கைதூக்கிவிடவும், மழைவல்லது.

Rain can mar, and also make, the prosperity of a people.

6. செயற்கரிய செய்வார் பெரியர் ; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (ங-சு)

(அதி-நீத்தார் பெருமை) க - ரை. செய்தற்கு அரிய

வற்றைச் செய்பவர் பெரியவர்; செய்யமாட்டாதவர் சிறிய
வர். நீத்தார் - துறந்தார்.

Who accomplish things difficult are great; who cannot, small.

7. அந்தணர் என்போர் அறவோர், மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். (௩-௰)

க - ரை. எல்லா உயிர்கள் இடத்தும் அருள் பூண்டு ஒழு
கும் அறவோரே 'அந்தணர்' எனப்படுவர். அறவோர்-தரும
சீலர்; செந்தண்மை - அருள்.

Who have compassion for all life are the truly righteous.

8. சிறப்பீனும், செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு! (௪-௧)

(அதி-அறன் வலியுறுத்தல்) க - ரை. சிறப்பையும் செல்
வத்தையும் தரும் அறத்தினும் பெரிய ஆக்கம், உயிர்க்கு யாது
ளது! ஊங்கு-மேலான; எவன்-யாது.

Righteousness yields both fame and wealth and is the greatest goo
in life.

9. அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (௪-௨)

க - ரை. அறத்தினும் பெரிய ஆக்கமும், அதை மறத்தல்
னும் பெரிய கேடும் இல்லை.

There is no greater good than Righteousness; no greater evil tha
forgetting it.

10. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். (௪-௩)

க - ரை. தரும காரியங்களை, கூடியவழிகளில் எல்லாம், இடை விடாது, எற்கும் இடங்களில் எல்லாம், செய்க. ஒல்லுதல்-இயலுதல்; ஓவாது-ஒழியாது; வாய்-இடம்.
Do good in all possible ways, unceasingly, wheresoever you can.

11. மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்தறன்,
ஆகுல நீர பிற. (சு-சு)

க - ரை. சுத்த மனத்தன் ஆகுக; அதுவே எல்லா அறமும்; மற்றவை ஆரவாரத் தன்மையின. ஆகுலம்-ஆரவாரம்; நீர-தன்மையின.
Purity of mind is righteousness; all else is but show.

12. அன்றறிவாம் என்னா தறம்செய்க; மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. (சு-சு)

க - ரை. 'பின்பு பார்த்துக் கொள்ளலாம்' என்னாது, அறத்தை இன்றே செய்க; சாகும்போது உயிர்க்கு அது தான் நீங்காத துணை ஆகும். பொன்றுதல்-சாதல்.
Do good to-day and tarry not; that alone will accompany you when you die.

13. அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
புறத்த, புகழும் இல. (சு-கூ)

க - ரை. புறத்த - இன்பத்துக்குப் புறம்பே உள்ளன, துன்பமாவன. பொருள் வெளிப்படை.
Righteousness alone yields happiness; all else, disgrace and misery.

அறத்துப்பால் - இல்லற இயல்

குடும்ப வாழ்க்கையைப்பற்றிக் கூறுவது.

14. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை,
பண்பும் பயனும் அது. (ரு-ரு)

(அதி–இல்வாழ்க்கை) க - ரை. தம்முள் ஒத்தகாதலும், பிறரிடத்துத் தரும சிந்தையும் உடையவராகக் கணவனும் மனைவியும் இல்வாழின், இல்வாழ்க்கையின் மெய்க்குணமும் பலனும் அதுவேயாகும். அன்பு-உறவினர், சாதியார், மதத்தினர், நாட்டினர் முதலிய தம்மொடு தொடர்புடையவரிடத்து உள்ள நேசம். பண்பு–குணம்; அறன்-அறம்.

Where the husband and wife love each other and are charitable to all others is the ideal home.

15. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்? (ரு-சு)

க - ரை. இல்வாழ்க்கையைத் தருமமார்க்கத்தில் நடத்தினால், அதைவிட்டுத் துறவறம் பூண்டு பெறும் பயன் யாது? ஆறு–வழி; ஆற்றின் – வழியில், செய்தால்.

The righteous householder has naught to gain by renunciation.

16. அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன் பழிப்ப தில்லாயின் நன்று. (ரு-எ)

க - ரை. அறம் என்பது இல்லறமே; அதுவும் தான், பிறர் பழிப்பதற்கு இடமின்றி நடந்தால், இன்னும் சிறந்து விளங்கும்.

Home-life is righteousness; and it is best, if without fault.

17. மனைத்தக்க மாண்புடையள் ஆகி, தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (ரு-க)

(அதி-வாழ்க்கைத்துணை நலம், மனைவிக்குரிய நற்குணங்கள்) க-ரை. குடும்ப வாழ்க்கைக்குரிய நற்குணங்கள் பொருந்தினவளாகி, கொண்ட கணவனது வரும்படிக்குத் தக்கவாறு குடும்பத்தை நடத்துபவளே, வாழ்க்கைத்துணை என்னும் சிறப்புப் பெயருக்கு உரியவள். மனை-இல்லறம்.

She who excels in domestic virtues and administers the family according to her husband's income is the ideal life-mate.

18. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். (ரு-உ)

க-ரை. மேற்கூறிய நற்குணங்கள் மனைவியிடத்து இல்லாவிடின், இல்வாழ்க்கை வேறுபெருமை எவ்வளவுடையதாயிருப்பினும் பயனில்லை.

If the housewife has not these virtues, all else will be in vain.

19. இல்லதென் இல்லவள் மாண்பானல்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை? (ரு-ங)

க-ரை. மனைவி மாட்சி உடையவளாயின், அக்குடும்ப வாழ்க்கையில் என்ன குறை? அவள் மாட்சி யில்லாதவளாயின், அக்குடும்பத்துக்கு என்ன சிறப்பு? மாட்சி-நற்குண நற் செய்கைகள்; கடை-இடத்து.

With an ideal mistress, what lacks a home? without such a one, what lacks it not?

20. பெண்ணில் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்? (ரு-ச)

க—ரை. கற்பென்னும் வலிமை பெண்ணுக்கிருந்தால், அப் பெண்ணினும் சிறந்தவை எவை?
What is there greater than a chaste wife?

21. தற்காத்து, தற்கொண்டாற் பேணி, தகைசான்ற
சொற்காத்து, சோர்விலாள் பெண். (கூ-கூ)

க-ரை. தீயவழியினின்றும் தன்னைக் காத்துக்கொண்டு, தன் கணவனைப் பேணி, தன் குடும்பத்தின் நற்பெயரைக் காத்து, யாது வரினும் சோர்வில்லாதவளே பெண்ணு வாள். தகை-தகுதி; சான்ற-மிக்க.
Who guards herself from evil, looks after her husband's comforts, cherishes the fair name of the family, and never sags in her duties, she is the true wife.

22. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (கூ-எ)

க-ரை. பெண்களைச் சிறையில் வைத்துக் காப்பதனால் என்ன பலன்? அவர்களே தங்கள் மன அடக்கத்தினால் தங்களைக் காத்துக்கொள்வதே சிறப்பு.
"Of what avail is watch and ward?
Honour's a woman's safest guard"—*Pope.*

23. பெறும் அவற்றுள் யாம் அறிவ தில்லை, அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (எ-க)

(அதி-புதல்வரைப்பெறுதல்) க-ரை. பெறும்பேறுக ளுள், அறிவுள்ள மக்களைப் பெறுதலல்லாத வேறு பேற்றை யாம் மதிப்பதில்லை. புதல்வர்-மக்கள்.
There is no greater fortune than children with understanding.

24. அமிழ்தினும் ஆற்ற இனிதே, தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். (எ-ச)

க — ரை. தாம் உண்ணும் பொழுது தம் குழந்தைகள் வந்து தொட்டு அளைந்த ஊண், தேவாமிர்தத்தினும் மிக இனிக்கும். ஆற்ற—மிக; கூழ்—ஊண்.

Sweeter than ambrosia is the food touched by the little hands of one's children.

25. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்; மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (எ-ரு)

க — ரை. தம் மக்கள் தொடுதல் உடலுக்கும், அவர் பேச்சுக் காதுக்கும் இனிமையாகும். மெய்—உடம்பு.

The touch of one's children is sweet to the body, their speech to the ear.

26. குழல் இனிது, யாழ்இனி தென்ப, தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (எ-சா)

க — ரை. தம் மக்களது மழலையைக் கேளாதவரே, குழல், யாழ் முதலியவற்றைப் பாராட்டுவர். யாழ்—தமிழர் வீணை.

Who have not heard their own children's prattle praise the flute and the harp.

27. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (எ-எ)

க — ரை. பெரியோர் சபையிலே தன்மகன் முதன்மை பெறும்படி செய்வதே, தகப்பன் மகனுக்குச் செய்யும் நன்மை. ஆற்றுதல்—செய்தல்; நன்றி—நன்மை; அவை-சபை.

A father's duty to his son is to make him fit for a seat of honour in an assembly of the learned.

28. தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (எ-அ)

க – ரை. தம்மைவிடத் தம்மக்கள் அறிவுடையராதல், உலகத்திலுள்ள மனிதருக் கெல்லாம் இனிமை பயக்கும்.

All men are pleased to see their children wiser than themselves.

29. ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (எ-கூ)

க–ரை. தன் மகனை நல்லவனென்று பிறர் புகழக் கேட்ட தாய், அவனைத் தான் பெற்ற பொழுதினும் அதிகம் மகிழ்வள். உவக்கும்-உவப்பாள்.

The mother who hears her son praised as a good man, feels greater happiness than on the day she bore him.

30. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல். (எ-கo)

க – ரை. தகப்பனுக்கு மகன் செய்யும் உதவி யாதெனில், 'இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ!' என்று பிறர் புகழும் புகழே. நோற்றல்–தவஞ்செய்தல்; சொல்–புகழ்.

The son who wins the applause of others brings honour to his father.

31. அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (அ-உ)

(அதி-அன்பு உடைமை) க — ரை. அன்பில்லாதவர், எல்லாம் தமக்கே உரியவை என்று கருதி ஒழுகுவர்; அன்புடையாரோ, தங்கள் எலும்பையுமே பிறர் பொருளாக் கருதி ஒழுகுவர்.

The loveless are all for themselves; the loving, for others only, even to the marrow of their bones.

32. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்,
மறத்திற்கும் அஃதே துணை. (அ-௬)

க - ரை. புண்ணியம் செய்தற்கு மட்டும் அன்பு துணையென்பர் அறியாதவர்: பாவம் செய்தலைத் தடுத்தற்கும் அதுவே துணையாம். சார்பு—துணை; மறம்—பாவம். 'மறத்திற்குத் துணை,' 'நோய்க்கு மருந்து' என்பது போல்வது.

Love not only helps righteousness but also prevents unrighteousness.

33. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று. (அ-அ)

க — ரை. கொடிய பாலைவனத்தில் நீர்வற்றினமரம் தளிர்க்க மாட்டதுபோல, மனத்தில் அன்பில்லாத உயிர் வாழ்க்கை, பயனின்றிக் கழியும். அகம் - உள்ளம்; வன்பால்-பாலை; கண் — இடத்தில்; அற்று-அது போன்றது.

Life without love in the heart is like a withered tree in a desert trying to sprout.

34. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பில் அவர்க்கு? (அ-௯)

க — ரை. உள்ளத்தில் அன்பில்லாதவர், வெளிப்பார்வைக்கு மட்டும் அழகராயிருக்கும் என்ன பயன்? உறுப்-

அவயவம்; யாக்கை—உடல்.
What avails beauty of body without love in the heart?

35. அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு. (அ-௧௦)

க-ரை. அன்பு செய்தற்கு உதவுவது உடம்பு; ஆதலால், அன்பில்லார் உடம்பு, உயிரோடு கூடியிருந்தும் பிணமே.
Love is life's essence; a loveless body is therefore a corpse.

36. விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (௯-௨)

(அதி-விருந்தோம்பல்—விருந்தினரை உபசரித்தல்) க-ரை. தான் உண்பது அமிர்தமெனினும், வீட்டுக்குவந்த அதிதிகள் வெளியே பசித்திருக்கத் தான் மட்டும் உண்பது விரும்பத் தக்கதன்று. சாவா மருந்து—அமிர்தம்.
Even ambrosia is not worth tasting, excluding guests.

37. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல். (௯-௪)

க-ரை. சற்பாத்திரமான விருந்தினரை அன்புடன் ஆதரிப்பவன் வீட்டில் ஸ்ரீதேவி விரும்பி வாசஞ் செய்வாள்.
That house prospers where strangers are gladly welcomed.

38. மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (௯-௧௦)

க-ரை. மோந்தால்தான் அனிச்சப்பூ வாடும்; விருந்

தினரோ, முகஞ்சுளித்துப் பார்த்த மாத்திரத்தில் வாடிவிடுவர்.
The *anichcha* flower fades when smelt; an unkind look is enough for the stranger.

39. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்
கணி; அல்ல மற்றுப் பிற. (கO-டு)

(அதி—இனியவை கூறல்) க — ரை. பணிவும் இன்சொல்லும் உடையனுயிருத்தலேஒருவனுக்கு ஆபரணமாமேயன்றி, மற்றெவைகளும் ஆகா.

Humility and kind speech are true adornments; naught else.

40. இன்சொல் இனிதீன்றல் காண்பான், எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது? (கO-க)

க — ரை. இனியசொல் இனியபயனை விளைத்தலைக் கண்டும், ஒருவன் கடுஞ்சொல் வழங்குவது ஏனோ?

Seeing kind words bear good fruit, why speak unkindlly?

41. இனிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (கO-கO)

க — ரை. இனிய சொற்கள் இருக்கக் கடுஞ்சொற்களை ஒருவன் கூறுதல், கனியிருக்கும்பொழுது காயை விரும்பியது போலாகும்.

To use unkind words while there are kind words is to prefer unripe berries to ripe fruit.

42. காலத்தி னல்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (கக-உ)

(அதி—செய்ந்நன்றி அறிதல்) க — ரை. சமயோசிதமான உபகாரம் சிறிதே யாயினும் மிகப்பெரிதாகப் பாராட்டப் படும். ஞாலம்—பூமி ; மாண—மிக.
Timely help is highly valued.

43. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்,
நன்மை கடலிற் பெரிது. (கக-ங)

க — ரை. பிரதி பலனைக் கருதாமல் செய்யப்படும் உதவி மிகப்பெரிதாகப் பாராட்டப்படும். தூக்குதல் — நிறுத்துப் பார்த்தல் ; நயன்—நயம்.
Disinterested help is highly valued.

44. தினைத்துணை நன்றி செயினும், பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (கக-ச)

க — ரை. பயன் உணர்வோர் தினையளவு உதவியையும் பனையளவாகப் பாராட்டுவர். துணை—அளவு.
The discerning value even a trifling help very highly.

45. மறவற்க மாசற்றார் கேண்மை ; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. (கக-ரு)

க — ரை. குற்றமற்றவர் சிநேகத்தை மறத்தலொழிக; ஆபத்தில் உதவினவர் நட்பினை மறத்தல் வேண்டாம். மாசு—குற்றம் ; கேண்மை—சிநேகம் ; துப்பு—துணை.
Forget not the friendship of the pure-minded or of those who helped you in adversity.

46. நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (கக-அ)

க — ரை. ஒருவர் செய்த நன்மையை மறப்பது நன்றன்று; தீமையோ, செய்த அப் பொழுதே மறந்துவிடுவது நன்று.

Forget not the good done ; forget the evil as soon as it is done.

47. கொன்றன்ன இன்னா செயினும், அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். (கக-கூ)

க — ரை. கொலைக்குச் சமமான ஒரு தீமையைப் பிறர் செய்யினும், அவர் முன்செய்த ஒரு நன்மையை ஊன்றி யோசிக்கின், அத்தீமை மனத்தை விட்டு நீங்கும்.

The remembrance of past good heals the sting of the evil now done.

48. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (கக-க0)

க — ரை. மற்றெந்தப் பாவிகளுக்கும் விடுதலை உண்டு ; தனக்கு ஒருவன் செய்த நன்றியை மறந்த பாவிக்கோ விடுதலை யில்லை. உய்வு—பிழைத்தல் ; மகன்—மனிதன்.

All other sins have absolution, but not ingratitude.

49. நன்றே தரினும், நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். (கஉ-ந)

(அதி—நடுவு நிலைமை) க — ரை. நடுவுநிலைமையை நீங்கி ஒழுகுவதால் ஒருவேளை நன்மை விளைவதா யிருப்பினும், அங்ஙனம் செய்யவேண்டா. இகத்தல்-நீங்குதல்.

Never be unjust, even for a likely good.

50. கெடுவல்யான் என்ப தறிக, தன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். (கஉ-சு)

க — ரை. மனத்தில் நடுவுநிலைமையை விட்டுப் பாரபக்ஷமாக ஒழுகின், தனக்குக் கேடுவரும் என்றறிக. ஒரீஇ—ஒருவி—நீங்கி.

Know that you will be ruined if against your own conscience you act unjustly.

51. சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (கஉ-அ)

க — ரை. தராசைப் போலச் சமனுயிருப்பதுதான் பெரியோர்க்கு அழகு. கோடுதல்-சாய்தல்.

The great ones are always evenly balanced in their conduct.

52. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவும் தமபோல் செயின். (கஉ-கo)

க — ரை. பிறர் பொருளையும் தம் பொருள்போலப் பேணி வாணிகஞ் செய்யின், அந்த வாணிகம் சிறக்கும்.

That trader flourishes most who cares as much for others' goods as for his own.

53. காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனின்ஊஉங் கில்லை உயிர்க்கு. (கங-உ)

(அதி-அடக்கமுடைமை) க — ரை. அடக்கத்தைப் பொருள்போல் பேணுக; அதனினும் பெரிய ஆக்கம் உயிருக்கில்லை. அடக்கம்—மனம் மொழி மெய்களைத் தீவழிச் செல்லாது அடக்குதல்.

Self-control is of the greatest good in life.

54. எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (கங-ரு)

க - ரை. பணிந்து நடத்தல் எல்லார்க்கும் நல்லது; விசேஷமாய், செல்வர் பணிந்து நடத்தல் அவர்க்குப் பிறி தொரு செல்வம் போலாகும்.

Humility is becoming in all; in the rich, it is like more riches.

55. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (கங-எ)

க - ரை. மற்றவைகளைக் காவாவிடினும் நாவைக் காக்க; அன்றேல், சொற்குற்றத்துக்குள்ளாகித் துன்புறுவர்.

Guard your tongue always, whatever else you may fail to guard; otherwise you will sorely repent.

56. தீயினாற் சுட்டபுண் உள் ஆறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (கங-கூ)

க - ரை. உள்-மனத்தின் கண் ஆறுவதைப் புண் என்றும், ஆறாததை வடு என்றும் கூறினார். பொருள் வெளிப்படை.

A burn by fire heals inwardly; a burn by the tongue, never.

57. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (கச-க)

(அதி-ஒழுக்கமுடைமை) க - ரை. விழுப்பம்-மேன்மை; ஓம்புதல்-பேணுதல். பொருள் வெளிப்படை.

Right conduct makes one great: so cherish it more than life.

58. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் ; தீஒழுக்கம்
என்றும் இடும்பை தரும். (கச-அ)

க - ரை. இடும்பை-துன்பம். பொருள் வெளிப்படை.

Right conduct is the root of good; evil conduct always results in misery.

59. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (கச-கூ)

க - ரை. ஒழுக்க முடையவர் வாய்தவறியும் தீயன சொல்லுதல் இயலாது. ஒல்லுதல்-இயலுதல்.

Men of right conduct utter naught evil even unthinkingly.

60. உலகத்தோ டொட்ட ஒழுகல், பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (கச-கo)

க-ரை. உலகத்தோடு ஒத்து நடக்கக் கல்லாதவர், வேறுபல கற்றிருப்பினும், அறிவில்லாதவரே. உலகம்-உயர்ந்தோர்.

"Who know not with the world in harmony to dwell,
May many things have learned, but nothing well." *G. U. Pope.*

61. பகை,பாவம், அச்சம், பழி,என நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். (கரு-கூ)

(அதி.-பிறனில் விழையாமை-பிறன் மனைவியை விரும்பாமை) க - ரை. பிறன் மனைவி யிடத்துச் செல்வானை விட்டுப் பகை பாவம் பயம் பழி என்னும் நான்கும் ஒருகாலும் நீங்கா. இறத்தல்—கடத்தல் ; இகத்தல்-நீங்குதல்.

Who covets another's wife is never free from hatred, sin, fear, and

62. அறன்வரையான் அல்ல செயினும், பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. (கரு-கo)

க – ரை. அறத்தைக் கொள்ளாமல் பாவங்களைச் செய்யி னும், பிறனுடைய எல்லைக்குட்பட்ட அவன் மனைவியை விரும்பும் பாவத்தைச் செய்யாமை நன்று. வரைதல்–கொள் ளல்; அல்ல-(அறனல்லாத) பாவங்கள்; வரை-எல்லை.

Though sinning otherwise, covet not another's wife.

63. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (கசு-க

(அதி–பொறை உடைமை) க - ரை. தன்னையே தோண் வோரையும் தாங்கும் பூமியைப்போல, தம்மை அவமதிப் போரை மன்னித்தல் மேலான குணம். பொறை-பொறுமை

The earth bears its diggers; so bear with your slanderers.

64. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்கு
பொன்றும் துணையும் புகழ். (கசு-ரு

க - ரை. தமக்குத் தீங்கிழைத் தோரைத் தண்டிக்கு சந்தோஷம் அன்று மட்டுமே; தண்டியாது மன்னித்து விட்டவர் புகழோ, சாகும்வரை நிலைபெறும். ஒறுத்தல் தண்டித்தல்; துணை–அளவு.

Who avenge are pleased that day,
But who forgive are pleased alway.

65. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். (கசு-அ

க - ரை. தம் கருவத்தினாலே அதிக்கிரமம் செய்தவனை

உன் பொறுமையினால் வென்றுவிடுக. தகுதி-நற்குணம்.
Forbear even with those who wrong you in their arrogance.

66. உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின். (கசு-கO

க - ரை. பிறர் சொல்லும் தீய சொல்லைப் பொறு
திருப்பவர் உண்ணாது நோற்பார்க்கும் முந்தியவர்.
Patience is greater than fasts and penances.

67. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான்,பிறன் ஆக்க
பேணா தழுக்கறுப் பான். (கஎ-ந

(அதி-அழுக்காறுமை) க - ரை. தருமமும் செல்வமு
வேண்டாதவனே, பிறன் செல்வத்தைக் கண்டு மகிழாத
பொறாமை கொள்வான். அழுக்காறு—பிறர் ஆக்கத்தை
காணப் பொறாது நெஞ்சு புழுங்குதல்.
Who seek righteousness and prosperity envy not.

68. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (கஎ-எ

க - ரை. பொறாமை யுடையவனைச் சீதேவி, மூதேவி
குக் காட்டிவிட்டு, நீங்கி விடுவாள். அவ்வித்தல்—பொறாமை
படல். செய்யவள்-சீதேவி; தவ்வை—தமக்கை; விடும்—நீங்கும்
Fortune forsakes the envious and hands them over to Misfortune.

69. அழுக்கா றெனஒரு பாவி, திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். (கஎ-அ

க — ரை. அழுக்காறென்னும் கொடிய பாவம், இம்மை
யில் ஒருவன் செல்வத்தைக் கெடுத்து, மறுமையில் அவனை

நரகில் புகுத்திவிடும். திரு—செல்வம்; செற்று—கெடுத்து; தீயுழி—நரகத்தில்; உய்த்தல்—செலுத்துதல்.
The sin of envy kills good fortune and leads to hell.

70. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுஅன்மை நாணு பவர். (கஅ-உ)

(அதி—வெஃகாமை) க—ரை. அநீதியை அஞ்சுவோர், இலாபத்துக் காசைப்பட்டுப் பழிவிளைப்பனவற்றைச் செய்யார். பயன்—இலாபம்; வெஃகல்—பிறர் பொருளுக் காசைப்படல்; படுதல்—உண்டாதல்; நடுஅன்மை—அநீதி.
The just never do evil for the sake of gain.

71. சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். (கஅ-ங)

க—ரை. பேரின்பத்தை வேண்டுவோர், சிறிய இன்பத்தையே தரவல்ல பொருள்களை விரும்பி, தருமமல்லவை செய்யார்.
Who seek heavenly bliss never do evil for the sake of worldly pleasures.

72. அறம் கூறான் அல்ல செயினும், ஒருவன்
புறம் கூறான் என்றல் இனிது. (ககூ-க)

(அதி—புறங்கூறாமை) க—ரை. தருமம் என்ற சொல்லையுமே வாயினாற் சொல்லாது ஒருவன் பாவமே செய்தாலும், 'புறங் கூறுதல்' என்னும் பாவமட்டும் செய்யாவிடின், இனிதாகும். புறங்கூறல் — ஒருவன் இல்லாதபோது பழித்தல்.
Let not even the unrighteous and the sinful backbite

73. கண்ணின்று கண் 1அறச் சொல்லினும், சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். (௧௯-௪)

க — ரை. ஒருவன் கண்ணெதிரே தாக்ஷண்ய மின்றிப் பேசினும் பேசுக; அவன் இல்லாதபோது, பின்னே குற்றமாகக்கூடும் சொல்லைப் பேசா தொழிக. 1கண்—கண்ணோட்டம், தாக்ஷண்யம்.

Condemn severely in one's presence if you will, but never backbite.

74. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை, புறம் சொல்லும்
புன்மையாற் காணப் படும். (௧௯-௫)

க — ரை. ஒருவனுக்கு தருமசிந்தை யில்லாமை, அவன் புறங்கூறுதலால் வெளியாகி விடும்.

Backbiting betrays the unrighteous heart.

75. பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். (௧௯-௬)

க — ரை. ஒருவன் நிந்தையை அவனில்லாத போது கூறுவோனது பழிகளுள் மிக்க பழியைப் பிறர் எடுத்துத் தூற்றுவர்.

The backbiter's worst vice is trumpeted abroad by others.

76. ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கின், பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? (௧௯-௧௦)

க — ரை. பிறர் குற்றங்களைக் காண்பதுபோலத் தம் குற்றங்களையும் மனிதர் காண்பாராகில், உயிர்களுக்குத் தீமை யுண்டோ? ஏதிலார்—அன்னியர்.

If men see their own faults as they do others', this world will be a paradise.

77. பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். (உ௦-க)

(அதி—பயனில சொல்லாமை) க—ரை. பலர் வெறுக்கும்படி பயனில்லாதவற்றைப் பேசுவோன் எல்லாராலும் இகழப்படுவான். முனிய—வெறுக்க; எள்ளப்படும்—இகழப்படுவான்.

Who bores with empty words is slighted by all.

78. பயன் இல்சொல் பாராட்டு வானை, மகன் எனல்;
மக்கட் பதடி எனல். (உ௦-சு)

க—ரை. பயனில்லாத சொற்களை விரும்பிப்பேசுவோனை மனிதன் என்று சொல்ல வேண்டாம்; மனிதப் பதர் என்று சொல்லுக. மகன்—மனிதன்; எனல்—என்று சொல்லற்க; பதடி—பதர்; எனல்—என்று சொல்லுக.

Who is fond of empty words is not a man, but human chaff.

79. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார், மருள் தீர்ந்த
மாசறு காட்சி யவர். (உ௦-கூ)

க—ரை. தெளிந்த புத்தியையும் ஞானத்தையும் உடையோர், பயனில்லாதவற்றை மறந்தும் சொல்லார். தீர்தல்—நீங்குதல்; பொச்சாப்பு—மறதி; மருள்—மனமயக்கம்.

The wise never utter vain words even unthinkingly.

80. சொல்லுக சொல்லிற் பயன்உடைய; சொல்லற்க
சொல்லிற் பயன் இலாச் சொல். (உ௦-க௦)

க—ரை. பேசினால், பயன்படப் பேசுக; அன்றேல், பேசாதொழிக.

Speak to the purpose, or be silent.

81. தீயவே தீய பயத்தலால், தீயவை
தீயினும் அஞ்சப் படும். (உக-உ)

(அதி—தீவினை அச்சம்) க - ரை. தீய செயல்கள் தீய பலன்களையே விளைத்தலால், அவை (தீமை நன்மை இரண்டையும் தாவல்ல) நெருப்பினும் அதிகம் அஞ்சப்படும்.

As evil deeds produce only evil, they should be dreaded more than fire.

82. மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு. (உக-ச)

க - ரை. பிறனுக்குக் கேடுசெய்தலை மறந்தும் நினைக்க வேண்டா; அங்ஙனம் நினைப்பானைத் தருமதேவதையே கெடுத்து விடும். சூழல்—ஆலோசித்தல்.

Devise not another's ruin even thoughtlessly, for God will then ruin you.

83. இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. (உக-ரு)

க - ரை. தன் தரித்திரம் தீரும்பொருட்டுத் தீமை செய்யவேண்டா; செய்தால், முன்னிலும் அதிக தரித்திரமே உண்டாகும். இலன்—இல்லாதவன், ஏழை.

Do no evil out of poverty; it will only make you poorer.

84. தீயவை செய்தார் கெடுதல்; நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று. (உக-அ)

க - ரை. ஒருவனைவிட்டு அவன் நிழல் நீங்குவதுமில்லை, தீமை செய்தவனை விட்டு நாசம் நீங்குவது மில்லை. வீதல்—

நீங்குதல்; உறைந்தற்று—தங்கியது போன்றது.
Ruin pursues the evil-doer like his shadow.

85. தன்னைத்தான் காதலன் ஆயின், எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (௨௧-௯)

க-ரை. தன் க்ஷேமத்தை நாடுபவன், தீவினையை அணுகவும் வேண்டா. எனைத்தொன்றும்—சிறிதளவும். துன்னுதல்—நெருங்குதல்; தீவினைப்பால்—தீவினை யிடத்து.
Never even approach aught evil, if you love your own good.

86. ஊருணி நீர்நிறைந் தற்றே, உலகவாம்
பேர்அறி வாளன் திரு. (௨௨-௫)

(ஒப்புரவு அறிதல்—உபகார சிந்தையே முறையென்று உணர்ந்து, அதற்குப் பொருந்த நடத்தல்) க-ரை. உயிர்களின் மீதெல்லாம் அன்பு பூண்டுள்ள பேரறிவுடையோனது செல்வம் தண்ணீர் நிறைந்த ஊருணிபோல் யாவர்க்கும் பொதுவாம். உலகு அவாம்—உலகத்தாரை யெல்லாம் நேசிக்கும்.
The riches of the compassionate are, like water in a public tank, common to all.

87. ஒப்புரவி னால்வரும் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. (௨௨-௧௦)

க-ரை. பிறர்க்குச் செய்யக்கடவதைச் செய்வதனால் நஷ்டம் வரும் எனின், ஒருவன் தன்னை விற்றாயினும் அப்படிப் பட்ட நஷ்டத்தைக் கொள்ளக் கடவன்.
If doing one's duty by one's fellowmen causes loss, one should procure such loss even by selling oneself.

88. வறியார்க்கொன் றீவதே ஈகை; மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. (உ௩-க)

(அதி-ஈகை-கொடுத்தல்) க-ரை. ஒன்று மில்லாதவர்க்குக் கொடுப்பதே கொடை; மற்ற வெல்லாம் பலனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். குறியெதிர்ப்பை – குறித்த அளவில் பண்டங்களின் கைம்மாற்று; நீர் – தன்மை.

Charity is what is given to the needy; all else is barter.

89. நல்லா றெனினும் கொளல்தீது; மேல்உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (உ௩-உ)

க-ரை. யாசித்தல் மோக்ஷத்துக்கு வழியாயினும் தீதே; கொடுத்தலால் மோக்ஷமில்லையாயினும், கொடுத்தல் நன்றே. ஆறு - வழி.

Begging is wrong, even if it leads to heaven; giving is good even if it bars out heaven.

90. ஒன்றா உலகத் துயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன் றில். (உ௪-௩)

(அதி-புகழ்) க – ரை. புகழ் ஒன்றே உலகத்திலே நிலைத்து நிற்கும். ஒன்றா–ஒன்றாக, ஒப்பற்றதாக; பொன்றாது-அழியாது.

Honour alone lasts for ever in this world.

91. தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (உ௪-௬)

க - ரை. பொருள் வெளிப்படை.

Better not be at all than be without honour.

92. புகழ்பட வாழாதார், தம்நோவார், தம்மை
இகழ்வாரை நோவ தெவன்? (உ௪-௭)

க - ரை. பிறர் புகழும்படி வாழாதவர், அப்படி வாழாததற்குத் தம்மையே நொந்துகொள்ளாமல், தம்மை இகழ்வாரை நோவதேனோ? நோவார்—நோவாதவராய்.

Why blame others for dispraising you, instead of blaming yourself for not meriting praise?

அறத்துப்பால் - துறவற இயல்

சந்நியாச ஆச்சிரமத்தின் இயல்பைக் கூறுவது.

93. அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. (உ௫-க)

(அதி - அருள் உடைமை) க - ரை. எல்லாச் செல்வங்களிலும் அருளாகிய செல்வமே மேலானது; பொருள்களாகிய செல்வங்கள் அற்பரிடத்தும் உள்ளன. அருள்—தொடர்பின்றி எல்லா உயிர்களிடத்தும் உள்ள நேசம். பூரியார்—அற்பர்.

Love for all is the noblest treasure; other treasures even the mean possess.

94. அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை, இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல். (உ௫-௩)

க - ரை. அருளுடையோர்க்கு நரகமில்லை.

Those who have love for all cannot go to hell.

95. அருள்இல்லார்க் கவ்வுலகம்இல்லை,பொருள் இல்லார்க்
கிவ்வுலகம் இல்லா கியாங்கு (உரு-எ)

க — ரை. பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்துச் சுகங்கள் இல்லாமைபோல, உயிர்கள் மேல் அருளில்லாதவர்க்கு மோக்ஷலோக மில்லை. ஆங்கு—போல.

Earth is not for the poor, nor Heaven for those without love.

96. வலியார்முன் தன்னை நினைக்க, தான் தன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து. (உரு-௧0)

க - ரை. தன்னினும் மெலியாரைத் தான் கஷ்டப் படுத்த நினையும்போது, தன்னினும் வலியார் முன் தான் கஷ்டப் படுத்தப்படும் நிலையில் நிற்பதாக நினைத்தொழுகுக.

“When weaker men you front with threatening brow,
Think how you felt in presence of some stronger foe”—*G.U. Pope.*

97. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்? (உசு-க)

(அதி-புலால் மறுத்தல்-மச்சம் மாமிசங்களை உண்ணுதலை மறுத்தல்) க - ரை. தன் சதையை வளர்க்கும் பொருட்டு மற்றப் பிராணிகளின் சதையைத் தின்பவன் உயிர்கள்மேல் அருள் உடையனாதல் எப்படி?

How can he who eats flesh to fatten himself love all beings?

98. பொருள்ஆட்சி போற்றாதார்க் கில்லை; அருள்ஆட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. (உசு-உ)

க — ரை. பொருளைப் பேணாதவரிடத்துப் பொருள் தங்காது; அதுபோல, ஊனைத் தின்பவரிடத்து அருள் தங்காது.

The spendthrift cannot have riches, nor the flesh-eater love.

99. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (உகூ-கூ)

க - ரை. அக்கினியில் நெய்யைப் பெய்து ஆயிரம் யாகங்களைச் செய்தலினும், ஓர் உயிரையும் கொன்று உண்ணாமையே பெரிது. அவி - நெய், சோறு, தேவருணவு; வேட்டல் - யாகஞ்செய்தல்; செகுத்தல் - கொல்லுதல்.

Non-killing is better than a thousand sacrifices.

100. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி
எல்லா உயிருந் தொழும். (உகூ-கo)

க - ரை. கொல்லுதலையும் மாமிசம் உண்ணுதலையும் விட்டவனை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

Who kills not, nor eats flesh, all lives adore him.

101. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (உஎ-க)

(அதி – தவம்) க - ரை. பிறரால் தனக்கு வரும் துன்பத்தைச் சகித்துக் கொள்ளுதலும், பிற உயிர்கட்குத் தான் துன்பம் செய்யாதிருத்தலுமே, தவத்தின் லக்ஷணம். நோன்றல்–நோற்றல், பொறுத்தல்; உறுகண்–துன்பம்; அற்றே–அவ்வளவினதே; உரு–இலக்ஷணம்.

Bear others' harms; do none yourself; that is true penance.

102. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்; மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு (உஎ-உ)

க – ரை. தவம் செய்வோரே தம் ஆன்மலாபத்துக்குரிய கருமங்களைச் செய்வோர்; அல்லாதவர் ஆசையினால் கேடு

செய்வாரே. அவம்-பயனற்றது, கேடு.

Who do penance benefit their souls; others do harm out of self-seeking.

103. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (உஎ-எ)

க — ரை. புடத்தழல் சுடச்சுடப் பொன்னின் பிரகாசம் மிகுவதுபோல், தவத்துன்பம் வருத்த வருத்த, தவசிக்கு ஞான வொளி மிகும்.

Gold shines more by heating; wisdom by suffering.

104. தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும். (உஎ-அ)

க — ரை. தான் என்னும் பற்று நீங்க வாழ்பவனை மற்ற உயிர்களெல்லாம் தொழும். ஏனைய-பிற.

All living beings worship the selfless.

105. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (உஅ-க

(அதி-கூடா ஒழுக்கம்) க — ரை. உள் ஒன்று வெளி ஒன்றாக நடப்பவனது பொய் யொழுக்கத்தைப் பஞ்சபூதங்களும் பார்த்துச் சிரிக்கும். படிறு-பொய்.

Nature laughs inwardly at the hypocrite's conduct.

106. வானுயர் தோற்றம் எவன்செய்யும்? தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். (உஅ-உ

க — ரை. மனத்திலே குற்ற முள்ளவன் வெளிப்பார்வைக்கு எவ்வளவு பெருமையுடையவனைத் தோன்றினாலு

என்ன பிரயோசனம்?

What avails godlike appearance when one feels inwardly guilty?

107. நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (உ அ-சு)

க—ரை. மனத்திலே பற்றிருக்க, முற்றும் துறந்தவர் போல் நடிப்பவரினும் கொடியவ ரில்லை.

No one is more cruel than hypocritical ascetics.

108. மனத்தது மாசாக, மாண்டார் நீர்ஆடி
மறைந் தொழுகும் மாந்தர் பலர். (உ அ-அ)

க—ரை. மாசு மனத்தி லிருக்க, மாசற்ற பெரியோர் போல நடித்து நடப்பவர் பலர். நீராடி-தன்மையினராய்.

Many are the hypocrites of outward purity and impure heart.

109. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். (உ அ-கூ)

க—ரை. அம்பு கோணுதிருப்பினும் கொல்லும்; வீணை கோணியிருப்பினும் இன்பம் தரும்; அதனால், உருவத்தால் ஒருவரை மதியாமல் செயலால் மதிப்பதே தகும். கணை—அம்பு; கோடு — கோணல்; செவ்விது — நல்லது; வினை—செயல்; பால் — தன்மை.

The straight arrow kills; the crooked harp pleases; judge therefore by the fruit and not by appearances.

110. மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின். (உ அ-கo)

க—ரை. உயர்ந்தோர் விலக்கியதைச் செய்யாமையே

போதும் ; வெளி வேஷம் வேண்டா. மழித்தல் – தலையை மொட்டை யடித்தல் ; நீட்டல்—சடை, தாடி வளர்த்தல்.
Avoid evil conduct ; no outward show is necessary.

111. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (உகூ-உ)

(அதி – கள்ளாமை, களவு செய்யாமை) க--ரை. பிறன் பொருளை வஞ்சனையால் கைக்கொள்வே மென்று மனத்தினால் நினைப்பதும் தீது. உள்ளல் – நினைத்தல்.
Coveting another's property even in thought is evil.

112. களவினால் ஆகிய ஆக்கம், அளவிறந்
தாவது போலக் கெடும். (உகூ-ந)

க - ரை, களவினால் வரும் செல்வம், பெருகுவதுபோல் தோன்றினும் கெட்டொழியும்.
Wealth obtained by stealth will seem to grow, but will perish.

113. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார், களவின்கண்
கன்றிய காதலவர். (உகூ-சு)

க – ரை. தம் வரும்படியின் எல்லைக்குள் செலவுகளை அடக்கமாட்டாதவர், களவில் மிகுந்த ஆசையுடையவரே ; எனெனில், தாம் கொள்ளும் கடனைத் தீர்க்கமாட்டாது, கள்வர் ஆவர் ஆகலின்.
Who spend more than they earn are truly thieves, for they cannot pay their debts.

114. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (ந0-க)

(அதி-வாய்மை) க - ரை. வாய்மையாவது எந்த உயிருக்கும் யாதொரு கேட்டையும் தராதனவற்றையே சொல்லுதலாம்; கேட்டைத்தரும் உண்மையையும் பேசக்கூடாதென்பது கருத்து.
Truthfulness is speech free from all evil.

115. தன்னெஞ் சறிவது பொய்யற்க; பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (௩௦-௩)
க - ரை. தன் மனசாரப் பொய்க்கவேண்டா; பொய்த்தால், மற்றவர் அறியாவிடினும், தன் மனமே தன்னைச்சுடும்.
Never be untrue to your own conscience; for it will scorch you, though others may not know your insincerity.

116. உள்ளத்தாற் பொய்யா தொழுகின், உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (௩௦-௪)
க - ரை. தன் மனசாரப் பொய்யாது ஒழுகுவோனை உயர்ந்தோர் யாவரும் மதிப்பர்.
Great men always think highly of the man of sincere conduct.

117. மனத்தொடு வாய்மை மொழியில், தவத்தொடு
தானஞ்செய் வாரில் தலை. (௩௦-௫)
க - ரை. மனசார மெய்பேசுபவன், தவமும் தானமும் செய்வாரினும் மேல். தலை—மேலானவன்.
Speaking as one thinks is greater than almsgiving and penance.

118. புறந்தூய்மை நீரான் அமையும்; அகம் தூய்மை
வாய்மையால் காணப் படும். (௩௦-௮)
க - ரை. ஒருவன் உடம்பு நீரினாலே சுத்தமாகும்; மனத்

தை, உண்மை பேசுதல் சுத்தஞ் செய்யும். புறம்-வெளி, உடம்பு ; அகம்-உள், மனம்.

Water cleanses the body and truth-telling the mind.

119. எல்லா விளக்கும் விளக்கல்ல, சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (ரு௦-க)

க - ரை. பெரியோர் விளக்கென்பது அக இருளை நீக்கும் பொய்யாமையாகிய விளக்கையே, மற்றவைகளை அல்ல.
The great ones regard only truthfulness (which enlightens the mind) as the true light; not the other shining bodies.

120. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை,எனைத்தொன்றும்
வாய்மையின் அல்ல பிற.

க - ரை. யாம் அறிந்த மெய்ந்நூல்களில் ஒன்றும் வாய்மையினும் சிறந்த தருமத்தைக் கூறுவதில்லை. மெய்-மெய்ந் நூல்கள்.

The scriptures exalt no duty higher than truthfulness.

121. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்,அல்லிடத்துக்
காக்கின்என்? காவாக்கால் என்? (ருக-க)

(அதி - வெகுளாமை - கோபியாமை) க - ரை. தன் கோபம் செல்லக்கூடிய, தன்னைவிட எளியாரிடத்துச் சினத்தை அடக்குபவனே சினம் காப்பான் ; தன் கோபம் செல்லாத, தன்னைவிட வலியாரிடத்துச் சினத்தை அடக்கிறு லென்ன ? அடக்காவிட்டால் என்ன ?

Guard your wrath against the weak: what boots it whether you guard it or not against your superiors?

122. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும். (௩௧-௩)

க - ரை. கோபத்தினால் தீமை விளைவதால், யாவரிடத்தும் கோபம் வேண்டா.

Be angry with none, for anger begets evil.

123. நகையும் உவகையும் கொல்லும் சினத்தில்
பகையும் உளவோ பிற? (௩௧-௪)

க - ரை. அகத்தில் உவகையையும் புறத்தில் முகமலர்ச்சியையும் கோபம் கொல்வதால், ஒருவனுக்கு அதனினும் கொடிய சத்துருக்கள் இல்லை.

Has man a greater foe than anger which kills the smile on his face and the joy in his heart?

124. தன்னைத்தான் காக்கில் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (௩௧-௫)

க - ரை. தன்னைக் காத்துக்கொள்ள விரும்புபவன் சினத்தை அடக்கக் கடவன்; அடக்காவிடின், அவனையே அது கெடுத்துவிடும்.

Guard against wrath in self-protection, or it will ruin you.

125. கறுத்தின்னா செய்தஅக் கண்ணும், மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (௩௨-௨)

(அதி—இன்னா செய்யாமை) க - ரை. தம்மேல் கோபம் கொண்டு பிறர் தீமை செய்யினும், தாம் அவர்க்குத் தீமை செய்யாதிருத்தலே பெரியோர் கொள்கையாம். இன்னா—தீமை; கறுத்து—கோபித்து; கோள்—கொள்கை.

The pure-minded never return evil for evil.

126. இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண
நன்னயம் செய்து விடல். (கஉ-சு)

க — ரை. தமக்குத் தீமை செய்தவர் வெட்கமடையும் படி அவருக்கு நன்மை செய்வது தான், அவரைத் தக்கபடி தண்டிப்பதாகும். ஒறுத்தல்—தண்டித்தல்; நன்னயம்—நல் நயம், பேருபகாரம்.

Put to shame and punish the evil-doer by doing good in return.

127. அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை? (கஉ-ரு)

க — ரை. வேறோர் உயிருக்கு வந்த நோயை, தம் நோய் போலெண்ணிக் காப்பாற்றாதவர் அறிவினால் பயனென்ன?

Of what use is their learning if the learned feel not another's woe as their own and prevent it?

128. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல் (கஉ-சு)

க — ரை. தாம் துன்பமென அறிந்தவற்றைப் பிறனுக்குச் செய்ய வேண்டா. இன்னா—துன்பம்; துன்னுதல்—மேவுதல்.

What you know as causing pain do not to another.

129. தன்உயிர்க் கின்னாமை தான்அறிவான், என்கொலோ
மன்உயிர்க் கின்னா செயல்! (கஉ-அ

க — ரை. பிறர் தனக்குச் செய்யும் தீங்கினால் உண்டா கும் வருத்தத்தை அறிந்தவன், தான் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்வது ஏனோ!

Whose soul hath felt the smart of wrong,
How can he do to others wrong?

130. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (கஉ-கூ)

க—ரை. காலையில் தாம் பிறர்க்குத் தீங்கு செய்தால், பிற்பகலிலேயே தமக்குத் தீங்கு இயல்பாக விளைந்துவிடும்.

The evil you sow in the forenoon you will reap in the afternoon.

131. நோய் எலாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்
நோய் இன்மை வேண்டு பவர். (கஉ-௪0)

க—ரை. தன் வினை தன்னைச் சுடும்; ஆதலால், தமக்குத் தீங்குவாராமையை விரும்புபவர் பிறர்க்குத் தீங்கு செய்யார். நோய்-தீங்கு.

As all evil falls back on the doer, who desires no evil to himself will do none to others.

132. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (கங-உ)

(அதி—கொல்லாமை) க—ரை. தன்னிடத்திலுள்ள உணவை, பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் பேணுதலே, நூல்கள் கூறும் தருமங்களிலெல்லாம் சிறந்தது. பகுத்தல்-பங்கிடல்; தொகுத்தல்-சேர்த்தல்.

Share what you have with the hungry and protect all life; this is the highest duty prescribed by the scriptures.

133. தன்உயிர் நீப்பினுஞ் செய்யற்க, தான்பிறி
தின்உயிர் நீக்கும் வினை. (கங-எ)

க – ரை. தன் உயிர் போவதாயிருப்பினும், பிற உயிரைக் கொல்ல வேண்டா.
Take not another life even for saving yours.

134. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (நச-க)

(அநி–நிலையாமை) க – ரை. அழியும் பொருள்களை அழியாதனவாகக் கொள்ளுதலினும் பேதைமை இல்லை.
The greatest folly is to mistake the transient for the eternal.

135. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். (நச-ரு)

க – ரை. சாவு வருமுன் விரைந்து நன்மை செய்க. நாச்செற்று-நாக்கின் வலிமையை அழித்து; விக்குள்-விக்கல்.
Hasten to do good ere death overtakes you.

136. நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு. (நச-சு)

க - ரை. நேற்று உயிரோ டிருந்தார் இன்று இறந்தாராதல், இவ்வுலகத்தில் மிகுதி. நெருநல்-நேற்று.
'Alive yesterday, gone to-day', the world abounds in this.

137. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (நச-அ)

க - ரை. தன்னுடன்பிறந்த முட்டையின் ஓடு தனித்துக் கிடக்க, பறவை வெளியேறிப் பறந்து போவது போலாகும், உடம்புக்கும் உயிருக்கு முள்ள தொடர்பு. குடம்பை-முட்டை; புள்-பறவை.

As the egg-shell and the bird which flies away leaving it behind, so are body and life related.

138. உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (கூச-கூ)

க - ரை. சாவு, தூக்கம் போலும்; மீண்டும் பிறத்தல், தூங்கினவன் விழிப்பது போலும். சாக்காடு - சாவு.

Death is like sleep and re-birth like awakening.

139. யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன். (கூரு-க)

(அதி-துறவு) க - ரை. ஒருவன் எந்த எந்தப் பொருள் களின் மேலுள்ள ஆசையை விட்டுவிடுகிறானோ, அந்த அந்தப் பொருள்களினால் அவனுக்குத் துன்பமில்லை. யாதெனின் - எதிலிருந்து; நீங்கியான் - நீங்கினவன்; நோதல் துன்பம்.

From whatsoever, man gets free,
From that no further pain hath he.

140. யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். (கூரு-கூ)

க - ரை. 'நான்', 'என்னுடையது' என்னும் பற்றை விட்டவன் மோக்ஷத்தை அடைவன். செருக்கு - இறுமாப்பு, இங்கே, மயக்கம்; வானோர் - தேவர்.

Who roots out selfishness will obtain salvation.

141. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (கூரு-ம)

க - ரை. பற்றில்லாத கடவுளின் மேல் அன்பு கொள்க; அதனால் மற்றப் பற்றுக்கள் விடும்.

To root out all your other desires, desire God who has no desires.

142. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (நகூ-ரு)

(அதி-மெய்யுணர்தல்) க - ரை. எந்தப்பொருள் எப்படித் தோன்றினும், அந்தப் பொருளின் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்வதே அறிவு.

Wisdom is to know the inmost nature of things, irrespective of their appearances.

143. காமம் வெகுளி மயக்கம், இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (நகூ-கO)

க - ரை. காமமும், கோபமும், ஒன்றை வேறொன்றாகக் கொண்டு மயங்குதலும் அற்றவனுக்கு, எத்துன்பமும் நேராது.

Nothing can harm him who has overcome lust, wrath and misapprehension.

144. அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்; அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (நஎ-அ)

(அதி – அவா அறுத்தல்) க - ரை. ஆசையில்லார்க்குத் துன்பமில்லை; ஆசை யுள்ளவர்க்குத் துன்பம் முடிவின்றி மேன்மேலும் வரும். தவாது-முடிவின்றி.

Desire not, suffer not; desire, and suffer endlessly.

145. இருவேறு உலகத் தியற்கை: திருவேறு,
தெள்ளியர் ஆதலும் வேறு. (நஅ-ச)

[stamp]

(அதி - ஊழ்-பழவினைப்பயன்) உலகத்தின் இயற்கை இரு வகைப்படும்: செல்வராதல் ஒன்று, அறிவுடையராதல் மற்றொன்று.

Some are born to riches, others to wisdom; *Karma* thus divides the world.

146. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்! (௩அ-௯)

க - ரை. நல்வினைப் பயனாக விளையும் இன்பத்தைத் தொலைக்க எண்ணாது அநுபவிப்பர், தீவினைப் பயனாக விளையும் துன்பத்தை மட்டும் நோவதேனோ!

They who rejoice when past good deeds produce good effects should not complain when past evil deeds produce misery.

பொருட்பால்—அரசியல்

அரசன் தன்மையைக் கூறுவது.

147. படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (௩௯-௧)

(அதி - இறைமாட்சி - அரசனது பெருமை) க - ரை. படைகள், குடிகள், உணவுப்பொருள்கள், மந்திரிகள், நண்பர்கள், காவல்கள், இவ்வாறும் உடையவன் அரசர்களுள் தலைவனாவான். கூழ்-உணவு; ஏறு-சிங்கம்.

Who has armies, subjects, foodstuffs, counsellors, friends, and secure fortresses will be a lion among kings.

148. அஞ்சாமை ஈகை அறிவூக்கம், இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. (ரு௧-௨)

க - ரை. வீரம், கொடை, அறிவு, ஊக்கம், இவைகளில் குறைவின்றியிருத்தலே வேந்தன் குணம். எஞ்சுதல் - குறைதல்.
A king should have courage, generosity, knowledge and energy.

149. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (ரு௧-௩)

க - ரை. குடிகள் எளிதிற் காணக்கூடியவனும், கடுஞ் சொற் பேசாதவனுமாய் அரசன் இருப்பின், அவன் நாடு புகழப்படும். மீக்கூறுதல் - மேலாகக் கூறுதல்.
That land is praised where the king is easily accessible to the people and refrains from harsh words.

150. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்
கிறைஎன்று வைக்கப் படும். (ரு௧-அ)

க - ரை. தான் கிரமமானவைகளையே செய்து, தன் குடிகளைப் பிறர் வருத்தாமல் காப்பாற்றும் அரசன், தெய்வமாக மதிக்கப்படுவான். இறை-தெய்வம்.
The king who behaves justly himself and protects his people from being harmed by others will be regarded as divine.

151. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (ரு௧-௯)

க - ரை. தன் காதுக்குக் கடுமையானவற்றையும் பொறுத்துக் கேட்டுச் செங்கோல் செலுத்தும் பேரறிவுடைய அரசனது குடைநிழலில் உலகம் அமையும். கவிகை-குடை.

He will be the lord of the world who can hear unpleasant truths and rule justly.

152. கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. (சO-க)

(அதி-கல்வி) கற்பனவற்றைத் தெளியக் கற்க ; பிறகு, அதற்குத் தக்கபடி ஒழுகுக. கசடற—ஐயம் திரிபு நீங்க. (ஐயம்-இதுவோ அதுவோ என்று தியங்குதல் ; திரிபு-ஒன்றை வேறொன்றாகக்கொண்டு மயங்குதல்) கசடு-குற்றம். Learn well, without doubt or error ; then act accordingly.

153. எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (சO-உ)

க-ரை. கணக்கு, பாஷா ஞானம், இவ்விரண்டும் மனிதர்க்கு இரண்டு கண்கள் போலாம்.

Mathematics and literature are the two eyes of men.

154. கண்ணுடையர் என்பவர் கற்றோர் , முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (சO-ங)

க-ரை. கற்றோரே கண்களை யுடையவர் என்று சொல்லத் தக்கவர் ; கல்லாதவர் முகத்தி லுள்ளன கண்க ளல்ல, புண்களே.

The eyes of the learned are eyes ; those of the ignorant are sores.

155. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (சO-ச)

க-ரை. தம்மைச் சந்திக்கும் போது சந்தோஷமும் பிரியும் போது விசனமும் உண்டாகச் செய்வது, கற்றவர்

குணம். உவத்தல்-களித்தல்; தலைக்கூடுதல் - சந்தித்தல்; உள்ள-(தம்பிரிவைத் துன்பமாக) நினையும்படி.
Delightful to meet and painful to part,—such are the learned.

156. தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (௪௦-௬)

கு - ரை. மணல் கேணி, தோண்டின அளவு நீர் ஊறும்; மனிதர் அறிவு, கல்வி கற்ற அளவு பெருகும். தொடுதல்-தோண்டுதல்.
The more you dig the sand-spring, the more the water; the more you learn, the more the wisdom.

157. யாதானும் நாடாமால் ஊராமால்; என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு? (௪௦-௭)

கு - ரை. கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாம், எந்த ஊரும் தன் ஊராம்; ஆகவே, ஒருவன் சாகும் வரையும் கல்வி பயிலாதது ஏனோ?
The learned feel at home in any country and city; how is it then that some men do not continne learning until they die?

158. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு,
காமுறுவர் கற்றறிந் தார். (௪௦-௯)

கு - ரை. தாம் மகிழ்ந்து கற்கும் கல்வி உலகத்துக்கும் இன்பம் கொடுத்தலைக் கண்டு, கற்றறிந்தோர், மேன்மேலும் கல்வியை விரும்புவர். காமுறல்—விரும்புதல்.
'The world delighting in their cherished lore
The learned see, and so love learning more.'

159. கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (௪௦-௧௦)

க-ரை. ஒருவனுக்குக் கல்வியே அழியாத சிறப்புடைய செல்வம்; மண் பொன் மணி முதலிய பிற, செல்வமல்ல. விழு-சீருடைய; மாடு-செல்வம்.

Learning is noble and indestructible riches; nothing else is true wealth.

160. அரங்கின்றி வட்டாடி அற்றே, நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல். (௪௧-௧)

(அதி-கல்லாமை) க-ரை. கற்றோர் சபையில், நூல்களைக் கற்று அறிவு நிரம்பாதவர் பேசப்புகுதல், கட்டங்கீறாமல் வட்டாடுவது போலும். அரங்கு-ஆடும் கட்டம்; வட்டாடுதல்-உண்டை யுருட்டுதல்; கோட்டி-கோஷ்டி-சபை.

For the half-learned man to address a learned assembly is like one trying to play draughts without drawing the chequered square.

161. கல்லா தவரும் நனி நல்லர், கற்றோர்முன்
சொல்லா திருக்கப் பெறின். (௪௧-௨)

க-ரை. கற்றவர் முன் வாய்திறவர் திருப்பாராயின், கல்லாதவருமே மிகவும் கற்றவர் போல்வார். நனி-மிக; நல்லர்-(இங்கு) கற்றோர்.

Even the illiterate will seem otherwise, if they will refrain from speaking before the learned.

162. உளர்என்னும் மாத்திரையர் அல்லால், பயவாக்
களர்அனையர் கல்லா தவர். (௪௧-௩)

க - ரை. கல்லாதவர், பேருக்குமட்டும் உயிர்வாழ்பவரேயன்றி, பயன்படாமையால், களர் நிலத்தையே ஒப்பர். மாத்திரை—அளவு.

The ignorant exist only in name and are like a barren awamp.

163. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. (சக-எ)

க - ரை. நுட்பமும் மாட்சிமையு முள்ள நூல்களை ஆராயாத ஒருவனது தேகப் பொலிவும் அழகும், ஒரு பொய்யுருவின் ஆகிருதியையும் அழகையுமே ஒக்கும். நுழைபுலம்—நூல்களுட்புகுந்து ஆராயும் அறிவு; எழில்—எழுச்சி; நலம்—அழகு; மண் மாண்புனைபாவை—மண்ணினுல் செய்யப்பட்ட பெரிய அழகிய உருவம்; அற்று—போன்றது.

A majestic and handsome but ignorant man is but a statue.

164. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. (சக-அ)

க - ரை. கற்றவருடைய தரித்திரத்தைவிட, கல்லாதவரது செல்வமே கேட்டைத்தரும்; ஏனெனின், செல்வத்தால் கல்லார் கெடுவர்; வறுமையினுல் கற்றவர் கெடார். நல்லார்—(இங்கு) கற்றவர்.

The riches of a fool are worse than a wise man's poverty, for they do the fool harm.

165. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றுர் அனைத்திலர் பாடு. (சக-கூ)

க - ரை. கல்லாதவர் உயர் குலத்தினராயினும், தாழ் குலத்துக் கற்றவரது பெருமை அவருக் கில்லை. பாடு—பெருமை.

A learned Pariah is greater than an ignorant Brahman.

166. விலங்கொடு மக்க ளனையர், இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (சக-கo)

க - ரை. மிருகங்களை விட மனிதர் எவ்வளவு மேலானவரோ, அவ்வளவு, கல்லாதவரை விடக் கற்றவர் மேலானவர். விலங்கு–மிருகம். ஏனையவர்–மற்றவர்; இங்கே, கல்லாதவர்.

The learned are to the ignorant as men are to beasts.

167. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. (சஉ-க)

(அதி–கேள்வி) க – ரை. பொருள் வெளிப்படை.

Knowledge (acquired by listenig) is the best of treasures.

168. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். (சஉ-உ)

க – ரை. செவிக்குக் கேள்வி உணவு இல்லாத பொழுது, வயிற்றுக்கும் உணவு சிறிது கொடுக்கப்படும். கேள்விக்காலத்துப் பசி தெரியாது; அதிக உணவு கெடுதி விளைக்கும்; சிறி துணவு அவசியம்.

When there is no food for the ear, the belly is to be fed a little. (Eat to live and learn.)

169. கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்
கொற்கத்தின் ஊற்றாம் துணை. (சஉ-ச)

க – ரை. கல்லாதவன் கேட்டேனும் அறிக; அக்கேள்வி, அவன் தளர்வுற்றகாலத்தில் ஊன்றுகோல் போன்று உதவும். ஒற்கம்–வறுமை; ஊற்று–ஊன்றுகோல்.

Who hath not himself studied, let him listen to others and acquire knowledge; it will stead him in adversity.

170. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். (௪௨-௫)

க — ரை. வழுக்குகின்ற நிலத்தில் நடப்பவனுக்கு ஊன்று கோல் போல, ஒழுக்கமுடையவர் வாய்ச்சொல் ஆபத்தில் உதவும். உழி—இடம்; அற்று-அன்னது, போன்றது.

The word of the righteous is like a staff to one who is walking on slippery ground.

171. எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (௪௨-௬)

க — ரை. நல்லவற்றைச் சிறிதேனும் கேட்க; கேள்வி அவ்வளவேயாயினும் நிறைந்த பெருமையைத்தரும்.

Hear even a little of what is good; it will bear fruit a thousandfold.

172. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (௪௨-௯)

க — ரை. நுண்ணிய கேள்வி யில்லாதவர் பணிவுடன் பேச அறியார்.

Who have not listened carefully and enlarged their understanding cannot speak with gentle decorum.

173. செவியில் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? (௪௨-௧௦)

க — ரை. செவிகளினால் சொற்சுவை பொருட்சுவை களை அறியமாட்டாமல், வாயினால் அறுசுவைகளை மட்டும்

அறிந்து அநுபவிக்கும் பாமர ஜனங்கள், இருந்தாலென்ன இறந்தாலென்ன? அவிதல்—சாதல்.

Whose tongue alone can taste but not the ear,
What matters if they live or disappear?

174. எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (சஉ-உ)

(அதி—அறிவுடைமை) க—ரை. எந்தப்பொருளை எவர் வாயால் கேட்பினும், கேட்ட பொருளின் உண்மையை நிச்சயித்தலே அறிவு.

It is wisdom, to ascertain the inmost truth of all you hear.

175. எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (சஉ-ச)

க—ரை. சொல்வனவற்றை எளிதில் விளங்கும்படி சொல்லி, கேட்பவைகளில் நுண்ணிய பொருளையும் நிச்சயிப்பதே அறிவு. எண் பொருள்—எளிய பொருள்.

Wisdom consists in expressing yourself lucidly and understanding the subtle meanings of what others say.

176. அறிவுடையார் ஆவ தறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (சஉ-எ)

க—ரை. பின்வருவதை முன் யோசனையினால் அறிபவர் அறிவுடையார்; அப்படி அறியமாட்டாதவர் அறிவிலார். ஆவது—(பின்னால்) வருவது; அறிகல்லாதவர்—அறியமுடியாதவர்.

The wise will know the coming events but not the ignorant.

177. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை ; அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். (௪௩-௮)

க-ரை. அஞ்சத் தக்கதை அஞ்சாமை அறிவில்லாமை யாகும் ; அதை அஞ்சுவது அறிவாளர் தொழில்.

Folly fears not what ought to be feared ; wisdom fears it. C. f. "Fools rush in where angels fear to tread."—*Pope.*

178. அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடைய ரேனும் இலர். (௪௩-௰)

க-ரை. பொருள் வெளிப்படை. என்—எதை.

To have knowledge is to have all ; to be ignorant is to have nothing.

179. தினைத்துணையாம் குற்றம் வரினும், பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். (௪௪-௩)

(அதி—குற்றம் கடிதல்—குற்றம்வாராது விலக்குதல்) க-ரை. பழியை அஞ்சுவோர், தினையளவு குற்றத்தையும் பனையள வாகக் கருதிச் செய்யா தொழிவர்.

Even a little fault is feared greatly and shunned by the honourable.

180. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். (௪௪-௫)

க-ரை. குற்றம் வாராமல் தடுத்துக் கொள்ளாதவன் வாழ்க்கை, தீயின் எதிர்ப்பட்ட வைக்கோற்போர் போலக் கெடும். வை—வைக்கோல் ; தூறு—கூட்டம், போர்.

Who guards not against evil will be ruined, like a haystack by a spark of fire.

181. தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு ? (௪௪-௬)

க — ரை. தன்னுடைய குற்றத்தை முன்னே கண்டு போக்கி, பின்பு பிறர் குற்றத்தைக் கண்டு முறைசெய்யும் அரசன், குற்றமற்றவனாவான். இறை—அரசன்.

The king who first avoids faults himself and then justly deals by others, what blame can he have ?

182. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை ; நயவற்க
நன்றி பயவா வினை. (௪௪-௯)

க — ரை. என்றும், தற்புகழ்ச்சியும் நன்மைதராத செயலை விரும்புவதும் வேண்டா. வியத்தல்—புகழ்தல் ; ஞான்று—நாள் ; நயத்தல்—விரும்புதல்.

Never praise yourself, nor desire what yields no good.

183. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். (௪௫-௧)

(அதி—பெரியாரைத் துணைக்கோடல். கோடல்—கொள்ளுதல்) க — ரை. தருமத்தை அறிந்த பெரியோரது சிநேகத்தின் அருமையை அறிந்து பெறுக. கேண்மை—சிநேகம்.

Seek the priceless friendship of righteous and learned elders.

184. தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. (௪௫-௪)

க — ரை. பெரியோரை அண்டி ஒழுகுதல் எல்லா வலிமையினும் சிறந்தது. தமர்—தம்முடையவர்.

The friendship of one's betters is a tower of strength.

185. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். (சரு-சு)

க — ரை. பெரியோர் சகவாசமுள்ள சீலனுக்குச் சத்துரு பயமில்லை. செற்றார்—கோபித்தவர், எதிரிகள்.

A well-behaved companion of the worthy fears no foes.

186. இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே
கெடுக்கும் தகைமை யவர் ? (சரு-எ)

க — ரை. தம்மைக் கண்டித்துப் புத்தி சொல்லும் பெரியோரை உடையவரை எவராலும் கெடுக்க முடியாது. தகைமை-தகுதி.

Who can harm them that have friends to rebuke and guide?

187. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். (சரு-அ)

க — ரை. தன்னைக் கண்டிக்கும் பெரியோர் இல்லாமையால் காவலற்ற அரசன், பகைவரில்லாவிடினும் தானே கெடுவான். ஏமருதல்—காக்கப்படுதல்.

The king who has none to rebuke and counsel him, will be ruined even without a foe.

188. பல்லார் பகைகொளலில் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (சரு-கo)

க — ரை. நல்லவர் நட்பைக் கைவிடல், பலர் பகையைக் கொள்ளுதலினும் பதின்மடங்கு கெட்டது. தொடர்—தொடர்பு, நட்பு.

To lose the friendship of the good is ten times worse than incurring the enmity of the many.

189. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. (சகூ-உ)

(அதி-சிற்றினம் சேராமை) க - ரை. நிலத்தின் இயல்பினால் அதைச் சேர்ந்த நீர் மாறுதல் அடையும்; அதுபோல, சேரும் இனத்தால் மனிதர் அறிவும் மாறும்.

As water is affected by the soil, so is character by company.

190. மனம்தூய்மை, செய்வினை தூய்மை, இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். (சகூ-ரு)

க - ரை. சேரும் இனத்தின் தூய்மையால் ஒருவன் மனமும் செயலும் தூயனவாம். தூ—பற்றுக்கோடு.

The company of the pure in heart purifies one's own mind and conduct.

191. நல்லினத்தின் ஊங்கும் துணை இல்லை; தீஇனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல். (சகூ- ௧)

க - ரை. நல்ல சகவாசத்தை விட உதவியும், தீய சகவாசத்தை விடக் கேடு விளைப்பதும், இல்லை.

Nothing helps more than good company, and nothing brings on troubles more than evil company.

192. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்றும் இல். (சஎ-உ)

(அதி-தெரிந்து செயல்வகை—ஆராய்ந்து செய்யும் திறம்) க - ரை. தேர்ந்த பெரியாருடன் ஆராய்ந்து, தானும் ஆலோசித்துக் காரியங்களைச் செய்பவர்களுக்கு முடியாதது ஒன்றுமில்லை.

Nothing is difficult to one who consults those who know and also thinks for himself.

193. ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (சஎ-ந)

க – ரை. அறிவுடையோர் இலாபத்தைக் கருதிக் கைம் முதலையும் இழக்கும் வினை செய்யார். ஊக்கல்–முயலுதல்.

The wise will not risk the capital for the interest.

194. செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (சஎ-௬)

க – ரை. அடாதவற்றைச் செய்தாலும், செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாவிட்டாலும், ஒருவன் கெடுவான்.

Not doing the right causes ruin as much as doing wrong.

195. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு. (சஎ-எ)

க – ரை. பொருள் வெளிப்படை.

Look before you leap. Think well before you act.

196. நன்றாற்றல் உள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. (சஎ-௯)

க – ரை. பிறர் சுபாவத்தை அறியாமல் செய்யும் நன்மையும் தவறாய் முடியும்.

Consider one's nature well before you seek to do good to one.

197. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (சஅ-க)

(அதி–வலியறிதல்) க - ரை. தூக்கி–சீர்தூக்கி. மாற்றான்-எதிரி. பொருள் வெளிப்படை.
Consider well the nature of the task, your ability, the obstacles, and the help you have, before you undertake the task.

198. பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (சஅ-ரு)

க – ரை. இலேசான மயில்தோகையை அதிகம் ஏற்றினாலும், வண்டியின் அச்சு முறியும். பீலி–மயில் தோகை; சாகாடு–சகடம்–வண்டி; இறுதல்–ஒடிதல்.
Even light feather will break a cart's axle, if loaded overmuch.

199. ஆற்றின் அளவறிந் தீக; அதுபொருள்
போற்றி வழங்கு நெறி. (சஅ-எ)

க – ரை. நல்ல வழியிலே தன் தகுதிக்கு இயன்ற அளவு கொடுப்பதே பொருளைக் கையாளும் முறை.
Spend suitably, according to your means, in good channels—that is the way to use money rightly.

200. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை,உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (சஅ-சூ)

க – ரை. மட்டுக்கு மிஞ்சின வாழ்க்கை அழிந்து விடும்.
A spendthrift will certainly be ruined.

201. பகல்வெல்லும் கூகையைக் காக்கை ; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (சகூ-க)

(அதி-காலம் அறிதல்) க – ரை. தன்னில் வலிமிக்க கோட்டானைக் காக்கை பகலில் வெல்வதுபோல, எதிரியைச்

சமயம் பார்த்து வெல்க. இகல்-பகை, பகைவர்; வேண்டும் பொழுது-(தக்க) பொழுது வேண்டும்.
The crow overcomes the owl in daylight; so bide your time.

202. அருவினை என்ப உளவோ, கருவியால்
காலம் அறிந்து செயின்? (சகூ-ரு)

க-ரை. காலமும் கருவியும் அறிந்து செய்வார்க்கு அரியவை இல்லை.
Is aught impossible to one who knows the right time and the means?

203. ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. (சகூ-சு)

க-ரை. வலியுடையவன் சமயம் வருமட்டும் ஒடுங்கியிருத்தல், சண்டைக்கடா தாக்குதற்குப் பின்வாங்குதல் போலும். தகர்-ஆட்டுக்கடா.
The seeming inactivity of the mighty is like the retreating of the fighting ram.

204. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே
செய்தற் கரிய செயல். (சகூ-கூ)

க-ரை. அரியவற்றைச் செய்வதற்குச் சமயம் வாய்த்த பொழுது, உடனே செய்க. எய்தல்-அடைதல்.
Act promptly at the opportune moment.

205. கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (சகூ-கo)

-ரை. சமயம் வரும்வரை (கொக்கு) உறங்குவது

போலிருந்து, வந்தவுடன் (அது கொத்துவதுபோல்) விரைந்து வினைசெய்க ; கூம்புதல்-ஒடுங்கியிருத்தல்.
Seem indifferent like the crane till the time comes and then act promptly like him.

206. நெடும்புனலுள் வெல்லும் முதலை, அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (ரு௦-ரு)
(அதி-இடன் அறிதல்) க-ரை. முதலை நீரில் வெல்லும் ; நீரைவிட்டால், பிற மிருகங்கள் அதைக் கொல்லும். அடும்-கொல்லும் ; புனலின்-நீரினின்று.
The crocodile wins in water ; other beasts kill it on land.

207. கடலோடா கால்வல் நெடுந்தேர் ; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (ரு௦-சா)
க-ரை. தேர், நீரில் ஓடாது; கப்பல், நிலத்தில் ஓடாது. கால்-சக்கரம் ; வல்-வலிய ; நாவாய்-கப்பல்.
The car cannot go in water nor the boat on land.

208. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா ; எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின். (ரு௦-எ)
க-ரை. தீரயோசித்து இடமறிந்து வினை செய்வோர்க்கு, தைரியம் ஒன்றே வேண்டிய துணை. எஞ்சாமை-ஒழியாமல்.
Who deliberates fully and acts as the place requires, needs only courage to achieve success.

209. குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல். (ருக-சு)

(அதி-தெரிந்து தெளிதல்—ஆராய்ந்து தெளிதல்) க-ரை. குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து, மிக்கவை எவையோ அவற்றின்படி மதிக்க. மிகை—அதிகம்.

Weigh the good and the evil, and judge by what weighs most.

210. பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும், தத்தம்
கருமமே கட்டளைக் கல். (ருக-ரு)

க-ரை. பெரியர் சிறியர் என்பது, அவர் செயலால் அறியப்படும். ஏனை—மற்ற; கட்டளைக்கல்-உரைகல்.

Their deeds are the touchstone of the great and the small.

211. தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும். (ருக-கo)

க-ரை. ஆராயாது ஒருவனை நம்புதலும், ஆராய்ந்து நம்பினவனைச் சமுசயித்தலும், தீராத துன்பத்தைத் தரும். ஐயுறவு-சமுசயம்.

Trusting a stranger and doubting a man of tried integrity, both cause endless trouble.

212. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல். (ருஉ-எ)

(அதி-தெரிந்து வினையாள்தல்—ஆராய்ந்து கொண்டவரால் வினைகளை முடித்தல்) க-ரை. பொருள் வெளிப்படை.

Find out the fit man for the task and then entrust it to him.

213. வினைக்குரிமை நாடிய பின்றை, அவனை
அதற்குரியன் ஆகச் செயல். (ருஉ-அ)

க - ரை. ஒன்றைச் செய்தற் கேற்றவனைக் கண்டறிந்த பின், அதை அவன் செய்யும்படி ஏற்படுத்துக.
Find the proper man for the task and set him to it.

214. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்,
சுற்றத்தார் கண்ணே உள. (ருங-க)
(அதி—சுற்றந் தழால்—உறவினரைத் தழுவி ஒழுகுதல்)
க — ரை. உறவினரே ஒருவன் தரித்திரனான பின்னும் பழைமை பாராட்டுவர். தழால்—தழுவுதல்; பற்றறல்-பசையறல், வறியனாதல்.
Kinsfolk alone desert not in adversity.

215. சுற்றத்தால் சுற்றப் பட ஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். (ருங-ச)
க — ரை. பொருள் வெளிப்படை. சுற்றம்-பந்துக்கள்.
To live surrounded by one's kith and kin is the privilege of the wealthy.

216. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின், அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். (ருங-ரு)
க — ரை. ஈகையும் இன் சொல்லும் உடையவனை உறவினர் விடாது சூழ்வர். ஆற்றின்-செய்தால்.
Gifts and kind words keep your kinsfolk round you.

217. காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. (ருங-எ)
க — ரை. காக்கை போல இனத்தோடு பகிர்ந்துண்பவரி

—த்தேதான் ஆக்கம் உளவாகும். கரவா-ஒளியாது; கரைதல்-(இனத்தைக்) கூவுதல். நீரார்-தன்மையினர்.
They prosper who, like the crow, share what they have with their kindred.

218. அச்சம் உடையார்க் கரண் இல்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. (௫௪-௪)
(அதி-பொச்சாவாமை-மறவாமை) க-ரை. அஞ்சுவோர்க்குக் கோட்டை முதலிய காவல்களால் பயனில்லை; மறதியுடையோர்க்குச் செல்வமிருந்தும் பயனில்லை.
Fortresses benefit not cowards, nor riches the forgetful.

219. வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (௫௫-௨)
(அதி-செங்கோன்மை) க-ரை. மழை உண்டாயின் உயிர் வாழும்; செங்கோல் அரசு உண்டாயின் குடிவாழும்.
All lives look up to rain, and subjects to their king's righteousness.

220. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (௫௫-௪)
க-ரை. குடிகளைப் பேணும் அரசனையே குடிகளும் பேணுவர். தழீஇ - தழுவி; கோலோச்சல் - செங்கோல் செலுத்துதல்.
A king who rules by the will of the people is revered.

221. வேல் அன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்; அதூஉம் கோடா தெனின். (௫௫-௬)

க-ரை. அரசனுக்கு வெற்றியைத் தருவது வேல் அன்று ; நியாயமான செங்கோலே. கோடுதல்-வளைதல்.

The just sceptre, not the spear, secures success.

222. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. (ருகூ-உ)

(அதி-கொடுங்கோன்மை) க-ரை. கொடுங்கோல் அரசன் குடிகளிடம் அநியாயமாய்ப் பொருளை வேண்டுதல், தனி வழியிலே கள்ளன் பயமுறுத்திப் பொருள் பறிப்பது போலும். இரவு-பிச்சை வேண்டுதல்.

A king's unjust demand is but armed dacoity.

223. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும். (ருகூ-ந)

க-ரை. தினந்தோறும் தீமையை நாடிக் கண்டுபிடித்து முறைசெய்யாத அரசன், படிப்படியாகத் தன் நாட்டை இழப்பான்.

The king who delays justice will gradually lose his kingdom.

224 கூழும் குடியும் ஒருங்கிழக்கும், கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (ருகூ-ச)

க-ரை. பின்விளைவதை ஆராயாது கொடுங்கோல் செலுத்தும் அரசன், செல்வத்தையும் குடிகளையும் ஒக்க இழப்பான். கூழ்-பொருள்.

A... unjust and thoughtless king will lose his kingdom.

225. அல்லல்பட் டாற்று தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (௫௬-௫)

க - ரை. அரசனால் வரும் துன்பத்தைச் சகிக்கமாட்டாது குடிகள் வடிக்கும் கண்ணீரே அவன் ஐசுவரியத்தை அழிக்கும் ஆயுதமாம். அல்லல்—துன்பம்.

The tears of the oppressed will ruin the king.

226. கடும்சொல்லன் கண்இலன் ஆயின், நெடும் செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். (௫௭-௬)

(அதி-வெருவந்த செய்யாமை-அச்சம் தரும் தொழில்களைச் செய்யாமை) க - ரை. அரசன், கடுஞ்சொல் பேசுவோனும் இரக்க மில்லாதவனும் இருப்பின், அவனது பெருஞ் செல்வம் நீடித்து நில்லாது அழியும். கண்—கண்ணோட்டம், தாட்சணியம்.

A harsh-speaking and merciless king will soon be ruined.

227. கண்ணோட்டத் துள்ள துலகியல்; அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. (௫அ-உ)

(அதி-கண்ணோட்டம்-தாக்ஷண்யம்) க - ரை. உலகம் நடத்தல் தாக்ஷண்யத்தைப் பொறுத்தது; தாக்ஷண்ய மில்லாதவர் உலகத்தி லிருத்தல் பூமிக்குப் பாரமே. உண்மை-இருத்தல்; நிலக்கு-பூமிக்கு; பொறை-பாரம்.

Society exists because of forbearance; the non-forbearing are a burden to the earth.

228. பண்என்னும் பாடற் கியைபின்றேல்? கண்என்னும்
[illegible]ம் இல்லாத கண்? (௫அ-௩)

க - ரை. பாட்டோடு பொருந்தாத இராகத்தினால் பயன் என்ன? கண்ணோட்டமில்லாத கண்ணினால் பயன் என்ன? இல்லாத கண்-இல்லாத இடத்து.
What avails melody without song, or eyes without kindliness?

229. கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல்,
புண்ணென் றுணரப் படும். (ருஅ-ரு)

க - ரை. கண்ணுக்கு ஆபரணம் கண்ணோட்டமே; அஃதில்லாத கண் புண்ணேயாம்.
Kindliness is an ornament to the eyes, which are but sores without it.

230. மண்ணோ டியைந்த மரத்தனையர், கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். (ருஅ-சு)

க - ரை. தாட்சணிய மில்லாதவர் கண்கள் மரக்கண்களை ஒக்கும். கண்—கண், மரக்கணு.
Men having eyes without kindliness are like trees having eye-like knots.

231. கருமம் சிதையாமல் கண்ஓட வல்லார்க்
குரிமை உடைத்திவ் உலகு. (ருஅ-அ)

க - ரை. காரியத்தைக் கெடுத்துவிடாமல் தாக்ஷணியம் காட்ட வல்லவருக்கே இவ்வுலகம் உரியது.
The world is theirs who can be kindly, yet firm.

232. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றும் ஓர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். (ருகூ-அ)

(அதி - ஒற்றாள்தல் - வேவுகாரரால் விஷயங்களை அறிதல்) க - ரை. ஒற்றன் ஒருவன் தெரிந்து வந்து கூறியதையும், பின்னும் ஓர் ஒற்றனால் உண்மை தெளிக. ஒற்று—வேவு; ஒற்றன்—வேவுகாரன்; ஒற்றுதல்-உளவறிதல்.

Verify a spy's report through another spy.

233. உடையர் எனப்படுவ தூக்கம்; அஃதில்லார்
உடைய துடையரோ மற்று. (சுO-க)

(அதி-ஊக்கம் உடைமை) க - ரை. ஊக்கமே உடைமை; மற்றவை உடைமையாகா.

Energy is wealth; who have it not, what have they?

234. உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும். (சுO-உ)

க - ரை. உள்ளம்-ஊக்கம். பொருள் வெளிப்படை.

Energy is wealth; without it, no treasures will last.

235. வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. (சுO-ரு)

க - ரை. தாமரையின் தண்டு குளத்தின் ஆழத்தளவாம்; மனிதரின் உயர்வு, அவர் ஊக்கத்தளவாம்.

The depth of the water determines the height of the lotus-stalk; so does one's energy one's greatness.

236. குடி என்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். (சுக-க)

(அதி-மடியின்மை-சோம்பலின்மை) க — ரை. சோம்பல்

ஏறஏற, ஒருவன் குடி கெடும். மடி-சோம்பல்; மாசு—இருள், குற்றம்.

Sluggishness ruins the family.

237. நெடுநீர், மறவி, மடி, துயில், நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (௬௧-௫)

க — ரை. தாமதம், மறதி, சோம்பல், உறக்கம், இந்நான்கும் கெடுவார் விரும்பியேறும் கப்பலாம். நெடுநீர்-வினையில் செய்ய வேண்டுவதை நீட்டித்துச் செய்யும் குணம்; துயில்-நித்திரை; காமக்கலன்-விரும்பும் கப்பல்.

Procrastination, forgetfulness, slothfulness and sleep are beloved of those who seek ruin.

238. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும். (௬௨-௧)

(அதி—ஆள்வினையுடைமை—இடைவிடாத உழைப்புடையவனாதல்) க — ரை. காரியம் அரியதென்று மலையவேண்டா; முயற்சியே வேண்டிய வலியைத் தரும். அசாவுதல்—தளர்தல்.

Despair not at the difficulty of the task; manly effort will give you strength to accomplish it.

239. தாள் ஆண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை
வாள் ஆண்மை போலக் கெடும். (௬௨-௪)

க — ரை. பேடிக்கு வீரச்செயலும், முயற்சி யில்லாதவனுக்குப் பரோபகாரமும் கைகூடா. தாள்-தாளாண்மை, முயற்சி; வேளாண்மை—உபகரிக்குங் குணம்.

Heroism to the courageless and generosity to the effortless are alike impossible.

240. முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (கூஉ-கூ)

க – ரை. முயற்சி செல்வத்தை விளைக்கும்; முயற்சி யின்மை தரித்திரத்தில் ஆழ்த்திவிடும். திருவினை–செல்வத்தை; இன்மை–தரித்திரம்.

Effort will make wealth and inactivity will lead to want.

241. பொறிஇன்மை யார்க்கும் பழி அன்றறி வறிந்
தாள்வினை இன்மை பழி. (கூஉ-அ)

க – ரை. அறிவில்லாமை யார்க்கும் பழியாகாது; செய்ய வேண்டுவனவற்றை அறிந்து முயலாமையே பழி. பொறி–அறிவு.

Idiocy is no reproach; but the inactivity of the intelligent is surely to blame.

242. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும் (கூஉ-கூ)

க – ரை. ஊழால் ஆகாததும் முயற்சியால் ஆகும். தெய்வம்–கருமபலன், ஊழ்.

What fate cannot secure manly effort can.

243. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (கூஉ-கo)

க – ரை. விடா முயற்சியுடையோர் பொல்லாத ஊழையும் வெல்வர். உப்பக்கம்-முதுகு; தாழாது-சோராது; உஞற்றுதல்–செய்தல்.

Who strive ceaselessly will overcome even *karma*.

244. இடுக்கண் வருங்கால் நகுக ; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். (கூரு-க)
(அதி-இடுக்கண் அழியாமை—துன்பத்தில் மனங்கலங்காமை) க—ரை. துன்பம் வரும்போது மகிழ்க; அது போல அதனை வெல்லும் உபாயம் வேறில்லை. இடுக்கண்—துன்பம் ; அடுத்து ஊர்வது-மேற்கொண்டு ஓட்டுவது.
Cheerfulness in adversity overcomes it best.

245. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (கூரு-உ)
க—ரை. வெள்ளம்போல் பெரிய துன்பங்களும் அறிவுடன் ஊன்றி யோசிக்கத் தொலையும். இடும்பை—துன்பம்.
A sea of troubles vanishes at the thought of the wise.

246. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். (கூரு-ரு)
க—ரை. மேன்மேலும் துன்பம் வரினும் மலையாது முயலுவோனுக்கு வரும் துன்பமே துன்பப்படும்.
Troubles are troubled, with him who undauntedly toils.

பொருட்பால்—அங்க இயல்

அரசின் அங்கங்களின் தன்மையைக் கூறுவது.

247. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை? (...)

(அதி—அமைச்சு—மந்திரியின் தன்மை) க — ரை. இயற்கை அறிவுடன் நூல் அறிவு முடையோர் அறியக்கூடாதபடி நுண்ணியன யாவை இருக்கின்றன ?
What is too subtle for them who are intelligent as well as learned?

248. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்,
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு (சுஇ-உ)

(அதி—சொல்வன்மை) க — ரை. ஆக்கமோ, கேடோ, சொல்லும் சொல்லினால் விளைதலால், கவனித்துப் பேசுக.
Be wary in speech, for it can make or mar.

249. கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்,கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல் (சுஇ-ங)

க — ரை. கேட்டவர் மனத்தைக் கவரும் தன்மை பொருந்தி, கேளாதவரும் கேட்க விரும்பும்படி பேசுவதே பேச்சு எனத்தகும். தகை அவாய்—தகுதியை விரும்பி; வேட்ப-விரும்ப.

"Tis speech that spell-bound holds the listening ear,
While those who have not heard desire to hear"—*G. U. Pope.*

250. சொல்லுக சொல்லை; பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை அறிந்து. (சுஇ-ரு)

க - ரை. மற்றவர் சொல் தன் சொல்லை வெல்லாதபடி, அறிந்து பேசுக,
Let what you say be irrefutable.

251. சொலல்வல்லன்,சோர்விலன்,அஞ்சான்,அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (சுஇ-எ

க - ரை. சொல்வன்மையும் மறதியின்மையும் தைரியமும் உள்ளவனை (சொற்) போரில் எவராலும் வெல்ல முடியாது. இகல்—போர், போட்டி.

Who speaks ably, forgets not, nor fears, none can outwit him.

252. பலசொல்லக் காமுறுவர் மன்ற, மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (சுரு-க)

க — ரை. குற்றமற்ற சில சொற்களைப் பேசமாட்டாதவரே பயனற்ற பல பேசுவர். மன்ற—நிச்சயமாக; தேற்றாதவர்—அறியாதவர்.

Who have not the wit of brevity indulge in many words.

253. என்றும் ஒருவுதல் வேண்டும், புகழொடு
நன்றி பயவா வினை. (சுசு-உ)

(அதி — வினைத்தூய்மை) க — ரை. புகழும் நன்மையும் தராத செயலை என்றும் ஒழிக. ஒருவுதல்-நீங்குதல்; பயவா-தராத.

Always avoid what is not honourable and useful.

254. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி அவர். (சுசு-ச)

க - ரை. தெள்ளறிவினர் துன்பத்துக் குட்படினும் இழிந்தவைகளைச் செய்யார். இளி — இழிவு.

Who see the truth steadily will never do aught mean, even when in trouble.

255. ஈன்றாள் பசிகாண்பா னாயினும், செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. (சுசு-சு)

க — ரை. தாயின் பசியை நீக்கும்பொருட்டும் பழியானவற்றைச் செய்யவேண்டா.
Never do aught dishonourable even to relieve your mother's hunger.

256. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (௬௭-௪)
(அதி - வினைத்திட்பம்—வினை செய்வதில் மன உறுதி)
க — ரை. பொருள் வெளிப்படை.
To say is easy; but to act accordingly is difficult.

257. எண்ணிய எண்ணியாங் செய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (௬௭-௬)
க — ரை. மனவுறுதி மட்டு மிருந்தால், நினைத்தபடி செய்து முடிக்கலாம். எண்ணியாங்கு — எண்ணியபடியே.
The firm-minded achieve their aims.

258. உருவுகண்டெள்ளாமைவேண்டும்,உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து. (௬௭-௭)
க — ரை. தேரின் கடையாணி போன்ற திண்ணியரும் உலகத்தில் இருப்பதால், உருவத்தின் சிறுமை கண்டு எவரையும் இகழவேண்டா. எள்ளல் - இகழல்.
Scorn not a thing because it is small: it is the small linchpin which keeps the car going.

259. துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (௬௭-௯)

க — ரை. முடிவில் இன்பம் தருவதை, செய்யுங்கால் உள வாகும் துன்ப மிகுதியைப் பாராட்டாது, செய்க.
Dare do what will result in happiness, not minding difficulties.

260. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும், வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. (சுஎ-0)
க — ரை. மற்றெவ்வகை உறுதி உளராயினும் வினை செய்யும் மனவுறுதி யில்லாரை உலகு மதியாது.
The infirm of purpose do not count with the wise, however strong they may otherwise be.

261. தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (சுஅ-உ)
(அதி - வினை செயல்வகை) க — ரை. பொருள் வெளிப் படை. பால-பகுதியுடைய (காரியங்களை); தூங்குதல் - கால தாமதம் செய்தல்.
Act leisurely or promptly, as ths business requires.

262. பொருள் கருவி காலம் வினை இடனொடைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். (சுஅ-ரு)
க — ரை. பொருள், கருவி, காலம், காரியம், இடம், இவ் வைந்தையும் தெளிவுற யோசித்து வினை செய்க.
Consider clearly the means, the tool, the time, the task and the place, and then do a thing.

263. முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (சு-அ-சு)

க - ரை. செய்ய வேண்டிய முயற்சி, வரக்கூடிய இடையூறுகள், அடையும் பலன், இவற்றைச் சீர்தூக்கி வினை செய்க.
Weigh well the effort needed, the obstacles, and the fruit, and then do a thing.

264. கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்
தெண்ணி உரைப்பான் தலை. (௬௮௭)

(அதி-தூது) க - ரை. நடக்கும் முறை, காலம், இடங்களைக் கருதி, தக்க ஆலோசனையுடன் பேசுவோனே தூதரில் சிறந்தோன். கடன்-கடமை; இங்கே, நடக்க வேண்டியமுறை.
Who considers well what ought to be done, the time, and the place, and negotiates accordingly, is the ideal ambassador.

265. இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாம் தூது. (௬௯௦)

க - ரை. தூதைக்கேட்ட வேற்றரசர் தன்னைக் கொல்வதா யிருப்பினும், அஞ்சி யொழியாமல் தூதை யுரைப்போனே, அரசனுக்கு உற்ற தூதனுவான்.
The ambassador who delivers his king's message fully, even at the risk of his own life, helps his king best.

266. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க,
இகல்வேந்தர்ச் சேர்ந் தொழுகுவார். (௬௯௧)

(அதி-மன்னரைச் சேர்ந்தொழுகல்) க - ரை. அதிகம் நெருங்காமலும் நீங்காமலும் தீக்காய்வதுபோல, அரசரோடு ஒழுகுக.

The king is like a fireplace: neither go too near him, nor keep too far off.

267. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். (எக-உ)

(அதி-குறிப்பறிதல்) க-ரை. வேறொருவன் மனத்தில் உள்ளதை நிச்சயமாக அறிபவன் தேவர்க்குச் சமானம்.

He is verily a god, who can doubtlessly read the thoughts of others.

268. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல். (எக-ந)

க-ரை. தன் மனக்குறிப்பினால் பிறர் மனத்தை அறிவாரை, எது கொடுத்தும் கொள்க.

Priceless is the service of those who can read the minds of others from the nature of their own minds.

269. குறிப்பிற் குறிப்புணரா வாயின், உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்? (எக-ரு)

க-ரை. வெளிக் குறிப்பைக் கண்டும் மனத்தை அறிய மாட்டாத கண்களால் என்ன பயன்?

Of what use are the eyes that cannot read the mind by observing outward signs?

270. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (எக-சு)

க-ரை. தன்னை அடுத்ததைக் கண்ணாடி காட்டுவது போல, மனத்தில் மிக்கதை முகம் காட்டும். கடுத்தல்-மிகுதல்.

The face reflects the mind, like a mirror.

271. கற்றறிந்தார் கல்வி விளங்கும், கசடறச்
சொற்றெரிதல் வல்லார் அகத்து. (எஉ-எ)

(அதி—அவை அறிதல்) க — ரை. பொருள் அறிய வல்ல புலவர் சபையிலே, கற்றோரது கல்வி பிரகாசிக்கும். அவை—சபை ; சொற்றெரிதல்-சொல் தெரிதல்.

The knowledge of the learned will shine in an assembly of the learned.

272. கற்றாருள் கற்றார் எனப்படுவர், கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். (எங-உ)

(அதி—அவை அஞ்சாமை) க — ரை. அறிஞர் ஏற்கும்படி தாம் கற்றதை எடுத்துரைக்க வல்லவரே புலவர்க்கும் புலவ ராவர்.

The learned among the learned are those who can convincingly expound what they have learnt.

273. பகை அகத்துச் சாவார் எளியர், அரியர்
அவையகத் தஞ்சா தவர். (எங-ங)

க — ரை. போரை அஞ்சாதவர் பலர் ; சபையை அஞ்சா தவரோ சிலரே.

Many fear not the battle-field, but few the assembly of the learned.

274. கற்றார்முன் கற்ற செலச்சொல்லி, தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். (எங-ச)

க — ரை. தாம் கற்றதை அறிஞர் சபை ஏற்க எடுத் துரைத்து, அதற்கு மேலானதை, அறிந்தோரிடம் தெரிந்து கொள்க.

Before the learned speak out what you have learnt, and learn from those who are wiser what you know not.

275. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு? (எஎ-கூ)

க - ரை. தைரியமிலார்க்கு வாள் ஏன்? சபை அஞ்சுவோர்க்கு நூல் என்?

What has a coward to do with a sword, or the timorous of speech with learning?

276. பல்லவை கற்றும் பயமிலரே, நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தார். (எஎ-அ)

க – ரை. தக்க சபையிலே தாம் கற்றவற்றை நன்கு ஏற்றுக் கொள்ளும்படி சொல்லமாட்டாதவர், பலகற்றிருந்தும் பயன் இல்லை. பயம்–பயன்.

Of what avail is vast learning if one cannot expound convincingly what one wants to communicate?

277. உறுபசியும், ஓவாப் பிணியும், செறுபகையும்,
சேரா தியல்வது நாடு. (எச-ச)

(அதி – நாடு) க – ரை. மிக்க பசி, நீங்காப் பிணி, அழிவு செய்யும் பகை, இவை இல்லாததே நாடு எனத்தகும்.

The ideal country is that which knows not hunger, disease or foes.

278. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் ஐந்து. (எச-அ)

க – ரை. ஏமம் – காவல்; அணி – அழகு. பொருள்

Freedom from disease, riches, fertility, happiness and security are the five ornaments of a country.

279. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள், அல்ல தில்லை பொருள். (எசுா-க)

(அதி - பொருள் செயல்வகை) க - ரை. ஒன்றுக்கும் உதவாதவருக்கும் மதிப்பைத்தருவது பொருளே.

There is nothing like riches to make a worthless man worthy.

280. இல்லாரை எல்லாரும் எள்ளுவர், செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. (எசுா-உ)

க - ரை. எள்ளுதல்-இகழ்தல். பொருள் வெளிப்படை.

All men despise the poor and respect the rich.

281. அறன்ஈனும், இன்பமும் ஈனும், திறன் அறிந்து
தீதின்றி வந்த பொருள். (எசுா-ச)

க - ரை. நல்ல வழியில் திரட்டிய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்.

Wealth acquired in harmless ways brings righteousness and pleasure.

282. அருள் என்னும் அன்பீன் குழவி, பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (எசுா-எ)

க - ரை. அன்பின் குழந்தையாகும் அருளுக்குப் பொருளே செவிலித்தாய்.

Benevolence is begotten of love and nursed by riches.

283. செய்க பொருளை, செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனில் கூரிய தில். (எசுா-சு

க - ரை. பொருளைத் திரட்டுக; பகையை அடக்க அதிற் சிறந்த தொன்றில்லை. செறுநர்-பகைவர்; செருக்கு—கர்வம்; எஃகு-ஆயுதம்.
Amass wealth; nothing helps better to overcome your enemies.

284. கான முயல் எய்த அம்பினில், யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (எஅ-உ)

(அதி - படைச் செருக்கு) க - ரை சிறிய காரியத்தில் சித்தி பெறுவதை விட, பெரியகாரியத்தை முயன்று தவறுதல் இனிது.
To aim a spear at an elephant and miss it, is more honourable than to shoot a hare with an arrow.

285. நிறைநீர நீரவர் கேண்மை, பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. (எகூ-உ)

(அதி - நட்பு) க - ரை. பெரியார் நட்பு வளர்பிறை போலும், சிறியார்நட்புத் தேய் பிறை போலும். நீர - தன்மையின; நீரவர்-(பெரும்) தன்மையுடையவர்; கேண்மை—சிநேகம்.
The friendship of the wise is like the waxing moon and of the foolish, like the waning one.

286. நவில்தொறும் நூல்நயம்போலும், பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு: (எகூ-ங)

க - ரை. படிக்கப் படிக்க நூல் இன்பம் தருவது போல, நல்லவர் சிநேகம் பழகப் பழக இனிக்கும். நவில்தல் – பயிலல், பழகுதல்.

A good book and a good friend are always fresh and pleasing.

287. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (எகூ-ச)

க — ரை. சிநேகம் செய்வது, கூடி நகையாடுதற் பொருட்டன்று; வரம்பு கடந்து செல்வதை இடித்துப் புத்திகூறித் தடுத்தற் பொருட்டே. நட்டல் – சிநேகம் செய்தல்.

Friendship is not for mirth and laughter, but to rebuke one when one goes astray.

288. புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (எகூ-ரு)

க — ரை. சிநேக மாகுதற்குப் புணர்ச்சியும், பழகுதலும் அவசிய மில்லை; உணர்ச்சி ஒற்றுமையே போதும்.

Not physical union, nor frequent company cements friendship so well as mutual sympathies.

289. முகம்நக நட்பது நட்பன்று, நெஞ்சத்
தகம்நக நட்பது நட்பு. (எகூ-சா)

க — ரை. முகமட்டும் மலரும்படி நட்பது சிநேகம் ஆகாது; மனமும் மலரும்படி நட்பதே நட்பாம். நக- மலர.

It is not the smile on the face but sincere warm-heartedness which denotes true friendship.

290. உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (எகூ-அ)

க - ரை. உடை நழுவ உடனே கைவந்து உதவுவது போல, துன்பத்தில் உதவுவதே நட்பு.

When one's clothing slips one's hand at once rushes to the rescue; so does friendship in trouble.

291. நாடாது நட்டலிற் கேடில்லை ; நட்டபின்
வீடில்லை, நட்பாள் பவர்க்கு. (அO-க)

(அதி - நட்புஆய்தல்) க – ரை. நட்புக் கொண்டபின் உத்தமர் அதை விடுவதில்லை; ஆகையால், ஆராயாது சிநேகம் செய்தலினும் பெரிய கேடில்லை. வீடு – விடுதல்.

"To make an untried man your friend is ruin sure ;
For friendship formed unbroken must endure."—*G. U. Pope.*

292. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. (அO-உ)

க - ரை. நற்குடிப் பிறந்தவனும் பழியை அஞ்சுபவனுமான ஒருவனை, யாதேனும் கொடுத்தாயினும் நட்புக்கொள்க.

The friendship of one who is a gentleman by birth and of spotless character is worth securing at any cost.

293. கேட்டினும் உண்டோர் உறுதி: கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல். (அO-சு)

க – ரை. கஷ்ட காலத்திலும் ஒரு நன்மை யுண்டு: அது இஷ்டரை அளந்து காட்டுவதாம்.

Even adversity is a blessing : it serves to gauge one's friends.

294. ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல். (அO-எ)

க - ரை. சிநேகரான அறிவீனர் விலகி விடுதல், ஒருவனுக்கு நன்மையேயாம். ஊதியம்-இலாபம்.

To be forsaken by one's foolish friends is a gain.

295. மருவுக மாசற்றார் கேண்மை ; ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (அ0-ல)

க — ரை. குற்றமற்றார் நட்பைக் கொள்க ; பொருந்தாதார் நட்பை ஒன்று கொடுத்தேனும் நீங்குக.

Secure the friendship of the faultless; and leave off the friendship of undesirable persons even at some cost.

296. அழிவந்த செய்யினும் அன்பறார், அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (அக-எ)

(அதி—பழைமை) க — ரை. அன்புடைய பழைய நண்பர், தமக்குக் கேடு செய்த நண்பரிடத்தும் அன்பு ஒழியார். பழைமை-நட்பின் பழைமை பற்றிப் பிழை பொறுத்தல்.

Old friends do not cease to love, even when you greatly wrong them.

297. உறின்நட் டறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என் ? (அஉ-உ)

(அதி—தீநட்பு) க — ரை. வாழ்வில் சிநேகித்துத் தாழ்வில் கைவிடுவோர நட்பினால் பயனில்லை. உறின்—உற்றால், அறின்—அற்றால் ; ஒரூஉம் — நீங்கும்.

Of what value is the friendship that clings in prosperity and forsakes in adversity ?

298. கனவினும் இன்னாது மன்னோ, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (அஉ—கூ)

க - ரை. ஒன்று சொல்லி ஒன்று செய்வார் நட்புக் கனவிலும் துன்பத்தையே தரும். மன், ஓ—அசைகள்.

The friendship of those who say one thing and do another is painful even in dream.

299. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது. (அஙு-ஙு)

(அதி—கூடா நட்பு) க—ரை. நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றாலும் கெட்டவர் மனம் திருந்தாது. மாணார்—மாட்சியில்லாதார்.

Even wide learning cannot reform the evil mind.

300. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். (அஙு-சு)

க—ரை. சிரித்த முகமும் கறுத்த நெஞ்சமு முள்ள வஞ்சரை அஞ்சுக. நகாஅ—நக்கு, சிரித்து.

Fear the outwardly smiling but black-hearted deceivers.

301. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
டூதியம் போகவிடல். (அசு-க)

(அதி—பேதைமை) க—ரை. கேடு தருவதைக் கைக்கொண்டு, ஆக்கம் தருவதைக் கைவிடுதலே பேதைமை என்பது.

Folly is to secure the evil and forsake the good.

302. ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தான் அடங்காப்
பேதையில் பேதையார் இல். (அசு-சு)

க—ரை. கற்றும், தெளிந்தும, பிறர்க்கு எடுத்துரைத்தும், கற்றுணர்ந்துரைத்தபடி தான் ஒழுகாத மூடனே முழுமூடன்.

He is the greatest fool who learns, understands, and preaches, but practices not.

303. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர், பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (அச-எ)

க – ரை. விதிவசத்தால் மூடனுக்குப் பெருஞ் செல்வம் கிடைப்பின், அதனால், அன்னியர் எல்லாப் போகங்களும் அநுபவிக்க, அவன் உறவினர் உணவுமின்றி வருந்துவர். ஆர–அநுபவிக்க.

The kindred of the rich fool starve, while strangers enjoy his wealth.

304. பெரிதினிது பேதையார் கேண்மை, பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். (அச-கூ)

க – ரை. பேதைகளின் சிநேகம் இனிது; ஏனெனில், அது நீங்கும்போது வருத்த மில்லை. பீழை–துன்பம்.

The friendship of fools is sweet indeed: there is no regret at parting.

305. அறிவின்மை இன்மையுள் இன்மை; பிறிதின்மை
இன்மையா வையா துலகு. (அரு-க)

(அதி–புல்லறிவாண்மை–சிற்றறிவினர் பேரறிவாளரைப் போல் ஒழுகுதல்) க – ரை. அறிவில்லாமையே பெருந்தரித்திரம்; பொருளில்லாமை அப்படிப்பட்ட தரித்திர மன்று. இன்மை–இல்லாமை, தரித்திரம்.

Lack of understanding is the greatest of lacks; the wise regard not other lacks.

306. வெண்மை எனப்படுவ தியாதெனின், 'ஒண்மை
உடை யம்யாம்' என்னும் செருக்கு. (அரு-ரு)

க – ரை. வெள்ளறிவு எது வென்றால், சிற்றறிவினர், தாம் பேரறிவுடையேம் என்று அகங்கரித்தலாம். வெண்மை– பேதைமை ; ஒண்மை–ஒளி, இங்கு அறிவு.

This is folly : the pride of the half-educated.

307. ஏவவும் செய்கலான், தான்தேறான், அவ்வுயிர்
போஒம் அளவும் ஓர் நோய். (அ௫-அ)

க - ரை. தானும் அறியாமல், பிறர் சொன்னாலும் கேளாதவன், சாகும் வரை, பூமிக்கு நோயே.

Who knows not himself nor listens to advice is a life-long pest to others.

308. இன்பத்துள் இன்பம் பயக்கும், இகல் என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (அ௬-ச)

(அதி–இகல்–பகை) க – ரை. பகையின்மை சிறந்த இன்பத்தைத் தரும்.

To have no enemy yields greatest pleasure.

309. வில்ஏர் உழவர்1 பகைகொளினும், கொள்ளற்க
சொல்ஏர் உழவர்2 பகை. (அஅ-உ)

(அதி–பகைத்திறன் தெரிதல்) க - ரை. 1. வில்லை ஏராகக் கொண்டு உழுபவர், வீரர்; 2. சொல்லை ஏராகக் கொண்டு உழுபவர், புலவர். பொருள் வெளிப்படை.

Incur, if you will, the enmity of one who wields the bow, but not of one who wields words.

310. இளைதாக முள்மரம் கொல்க ; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (அ௯-௯)

க - ரை. சத்துரு பலப்படுமுன், அவனை அழிக்க. இளைது- இளையது, முற்றுதது. களையுநர்-களைபவர்; காழ்த்த-வைரங் கொண்ட.

Root out the thorny-tree when it is tender, for when grown, it will destroy the hands of the destroyer.

311. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (அகூ-உ)

(அதி-உட்பகை) க - ரை. வெளிப் பகைவரை அஞ்ச வேண்டா; நண்பர்போல் நடிக்கும் உட்பகைவரை அஞ்சுக. கேள்-நண்பர்.

Fear not the open and known foe, but fear the one in the cloak of a friend.

312. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும், கூடாதே
உட்பகை உற்ற குடி. (அகூ-எ)

க - ரை. உட்பகையுள்ள குடி, செப்பும் மூடியும் போல, தோற்றத்தில் ஒன்றுபட்டாற் போல் கூடினும், உண்மையில் ஒன்றுபடாது.

Though seemingly united, the family where there is inward hatred can never have real union.

313. உடம்பா டிலாதவர் வாழ்க்கை, குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று. (அகூ-கO)

க - ரை. மனப்பொருத்தமில்லாதாரோடு கூடிவாழ்தல், ஒரே குடிசைக்குள் பாம்போடு வாழ்தல் போலாம். குடங்கர்-குடிசை.

To live with unsympathetic persons is like dwelling in the same hut with a snake.

314. பெரியாரைப் பேணு தொழுகில், பெரியாரால்
பேரா இடும்பை தரும். (கூ0-உ)

(அதி–பெரியாரைப்பிழையாமை) க – ரை. பெரியோரை அவமதித்தால் நீங்காத துன்பம் விளையும்.

Do not disregard the great, for it will cause irremediable trouble.

315. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல். (கூ0-ச)

க – ரை. வலியில்லார் வலியார்க்குத் தீங்கு செய்தல், யமனை அழைப்பது போலாம். கூற்றம்-யமன்; விளித்தல்-அழைத்தல்.

It is like courting destruction when the weak injure the strong.

316. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம், உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (கூ0-ரு)

க - ரை. தீ சுட்டாலும் பிழைக்கலாம்; பெரியோர்க்குத் தவறு செய்பவர் பிழையார்.

You can survive a burn by fire, but not wronging the mighty.

317. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும், மற்றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். (கூக-[illegible])

(அதி-பெண்வழிச் சேறல்-மனைவி சொற்படி நடத்தல்)
க - ரை. மனைவிக்குப் பயப்பட்டு நடப்பவன், நல்லவர்க்கு நன்மை செய்ய என்றும் பயப்படுவான். சேறல்–செல்தல்;

Who fears his wife will fear doing good.

318. இருமனப் பெண்டிரும், கள்ளும், கவறும்,
திருநீக்கப் பட்டார் தொடர்பு. (கூ௨-௧0)

(அதி-வரைவில் மகளிர்-வேசையர்) க-ரை. வேசியரும் கள்ளும் சூதும் துர்ப்பாக்கியர் விரும்புவன. கவறு-சூது; திரு-லக்ஷ்மி.

Public women, drink, and gambling, are the pleasures of the doomed.

319. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால், என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி! (கூ௩-௩)

(அதி-கள் உண்ணாமை) க-ரை. கள்ளுண்டவனைக் கண்டால் தாயும் வெறுப்பாள்; பெரியோரைப் பற்றிப் பேசுவானேன்! களி-கள்ளுண்டு களித்தல்.

Even a mother's face betrays the pain she feels on seeing her son drunk; what need then to speak of the great ones?

320. கையறி யாமை உடைத்தே, பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (கூ௩-௫)

க-ரை. தன்னையே மறக்கச் செய்யும் கள்ளை விலைக்கு வாங்கி யுண்ணுதல், செய்வதறியா மூடத்தனமே. கை-செயல்; மெய்-உடல்.

It is folly to pay for depriving one's senses.

321. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (கூ௩-௬)

க-ரை. கள்ளுண்பவர், அறிவிழத்தலால் தூங்குவோ

ரையும் செத்தோரையும் போல்வார்; (சிறிது காலத்தில் இறத்தலால்) நஞ்சுண்பவர் போல்வார். துஞ்சுதல்—தூங்குதல். ஞான்று-காலம்.
Drunkards, losing consciousness, resemble the sleeping and the dead; and dying prematurely, the poison-drinkers.

322. களித்தானைக் காரணங் காட்டுதல், கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று. (கூ௩-கூ)
க-ரை. கள்ளுண்டு மயங்கினவனுக்குப் புத்தி கூறுதல், நீருள் மூழ்கினவனைத் தீப்பந்தத்தைக் கொண்டு நீருள் இறங்கித் தேடுவது போலாம். துருவுதல்-தேடுதல்.
To reason with a drunken man is like searching with a torch in water for a diver.

323. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு? (கூ௩-0)
க-ரை. குடித்தவன் ஒருவனை, தான் குடியாத நேரத்தில், காணும் குடியன், தன்னிலைமையும் அப்படியே என்று அறியானோ?
When the drunkard, when sober, sees one drunk, will he not realise his own state when drunk?

324. வேண்டற்க, வென்றிடினும், சூதினை; வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று. (கூ௪-க)
(அதி—சூது) க-ரை. வென்றாலும் சூதை விரும்ப வேண்டா; வென்ற பொருளே தூண்டிற் கொக்கி போல நாச காரணமாகும். பொன்-இரும்பு.
Gamble not even if you win, for it is a deadly bait.

325. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு? (கூச-உ)

க - ரை. ஒன்று வென்று நூறு தோற்கும் சூதர்க்கும் நல்வாழ்வு அடைய வழியுண்டோ? ஆறு-வழி.

The gambler gains one and loses a hundred: how can he prosper?

326. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில். (கூச-ச)

க - ரை. பல சிறுமைகளை உண்டாக்கிச் சீர்குலைக்கும் சூதைப்போல் வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

There is nothing like gambling to cause poverty.

327. உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி, என் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (கூச-கூ)

க - ரை. ஒளி-புகழ்; ஆயம்-சூது. பொருள் வெளிப்படை.

The gambler ever lacks fame, learning, wealth, food, and clothes.

328. அற்றால் அளவறிந் துண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. (கூரு-ரு)

(அதி-மருந்து) க - ரை. முன் உண்டது ஜீரணமான பின் மிதமாய் உண்க; ஆயுளை நீட்டிக்கும் வழி அதுவே. உய்த்தல்-செலுத்துதல்.

Eat moderately and only when hungry, and thus live long.

329. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்,
கழிபேர் இரையான்கண் நோய். (கூரு-கூ)

க - ரை. மிதபோசனம் நன்றென்றறிந்து உண்பவன் சுகப் படுவதுபோல, பெருந்தீனிக்காரன் நோயுற்று வருந்துவான்.
The pleasure of one who eats moderately and only to recoup what the body has lost, and the suffering of the glutton, are equally certain.

பொருட்பால்-ஒழிபியல்

முந்திய அரசியல் அங்க இயல்களில் அடங்காத விஷயங்களைப் பற்றிக் கூறுவது.

330. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (கூகூ-உ)

(அதி—குடிமை-நற்குடியிற் பிறந்தாரது தன்மை) க - ரை. இழுக்குதல்-தவறுதல். பொருள் வெளிப்படை.
Men of birth never swerve from right conduct, truthfulness, and modesty.

331. அடுக்கிய கோடி பெறினும், குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (கூகூ-ச)

க - ரை. பலகோடி பொன் கிடைப்பதாயினும், நற் குடிப்பிறந்தோர் இழிவானவற்றைச் செய்யார்.
No reward can tempt men of birth to do aught mean.

332. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. (கூகூ-எ)

க - ரை. நற்குடிப்பிறந்தார் குற்றம், சந்திரனது களங் கம்போல, பலர் அறியத் தெளிவாய்த் தோன்றும்.

விசும்பு . ஆகாயம்.

The faults of the noble will be conspicuous like the spots on the moon.

333. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் ; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். (கூகூ-கூ)

க - ரை. நிலத்தின் இயல்பைப் பயிர்முளையும், குலத்தின் இயல்பை வாய்ச்சொல்லும், காட்டும். கால்-விதைமுளை.

The seedlings show the soil; and speech, one's gentility.

334. பெருக்கத்து வேண்டும் பணிதல், சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (கூஎ-௩)

(அதி-மானம்) க - ரை. வாழ்வில் பணிவும், தாழ்வில் தம்மைத் தாழ்த்தாது உயர்த்தலும் வேண்டும்.

Be humble in prosperity and self-respecting in poverty.

335. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (கூஎ-௪)

க - ரை. நிலைதவறின மேலோர் கழிசடையே.

Men fallen from their state are like hair dropped from the head.

336. குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின். (கூஎ-௫)

க - ரை. குன்றிமணி யளவு தவறு செய்யினும், மலை போல்வாரும் இழிவடைவர்.

Even a little wrong makes the great small.

337. புகழ் இன்றால், புத்தேள்நாட் டுய்யாதால், என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை ! (கூஎ-௬)

க - ரை. தம்மை மதியாதாரை வழிபட்டு ஒழுகுவதினால் புகழுமில்லை, புண்ணியமுமில்லை ; பின், அப்படிச் செய்வது ஏனோ! புத்தேள் நாடு-தேவலோகம் ; உய்த்தல்-கொண்டு சேர்த்தல்; நிலை-நிற்றல்.

Why serve those who disregard you? It yields not honour in this world, nor bliss in the next.

338. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின், அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. (௬௭-௭)

க - ரை. மதியாதாரை அண்டி வாழ்தலினும், வாழாது அழிதலே மேல். ஒட்டார்-பொருந்தாதவர்.

Better die than prosper by serving those who disregard you.

339. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (௬௭-௯)

க - ரை. தன்வாலில் ஒரு மயிர் போயினும் உயிரைவிடும் கவரிமானைப் போன்ற மானிகளுக்கு, உயிரைவிட மானமே பெரிது. கவரிமா-கவரிமான்.

The great will rather die than lose their honor and live. (See 357)

340. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (௬௮-௨)

(அதி-பெருமை) க - ரை. உயிர்களுக்குள் உயர்வு தாழ்வு பிறப்பினா லில்லை ; செயலால்தான் வரும்.

By birth all beings are equal : men become great or small as they act.

341. மேல்இருந்தும்மேல்அல்லரார்மேல்அல்லர்;கீழ்இருந்தும்,
கீழ்அல்லார் கீழ்அல் லவர். (௬௮-௩)

க - ரை. மேன்மையும் கீழ்மையும் ஸ்தானத்தால் வருவன வல்ல ; ஒழுக்கத்தால் வருவனவே.
Greatness and smallness come by one's conduct and not by one's position in life.

342. பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (கூஅ-அ)

க - ரை. பெரியார் என்றும் அடங்கி நடப்பர்; சிறியாரோ, தம்மையே மெச்சிப் பிலுக்கித் திரிவர்.
Greatness is always humble, while littleness is boastful.

343. பெருமை, பெருமிதம் இன்மை ; சிறுமை,
பெருமிதம் ஊர்ந்து விடல். (கூஅ-கூ)

க - ரை. பெருந்தன்மை யுடையார்க்குக் கர்வ மில்லை; அற்பரே கர்விக ளாவர். பெருமிதம்—கர்வம்.
The great are never proud ; but the little are ever so.

344. குணநலம், சான்றோர் நலனே; பிறநலம்,
எந்நலத் துள்ளதூஉம் அன்று. (கூகூ-உ

(அதி—சான்றாண்மை—நற்குண நிறைவு) க - ரை. பெரியோர் அழகென்பது குண அழகே ; மற்ற அழகல்ல.
The great regard character as beauty, naught else.

345. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண். (கூகூ-ந

க - ரை. அன்பு, நாணம், உபகாரம், தாக்ஷண்யம், மெய் பேசுதல், இவ்வைந்துமே பெருந்தன்மைக்கு ஆதாரம் ...

Love, modesty, charity, mercy, and truthfulness, are the pillars of greatness.

346. கொல்லா நலத்தது நோன்மை ; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (கூகூ-சா)

க - ரை. தவத்துக்கு இன்றியமையாத நலம் கொல்லாமை ; அதுபோல, பெருந்தன்மைக்கு, பிறரைப்பழியாமை.
Penance consists in non-killing and greatness in non-slandering.

347. சால்பிற்குக் கட்டளை யாதெனில், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (கூகூ-சு)

க - ரை. கீழானவர் தன்னை வென்ற போதும் அதை இனிதேற்றலே பெருந்தன்மை. கட்டளை - உரைகல் ; துலை - தராசு, சமன் ; கண் - இடம்.
To take defeat with good grace even at the hands of inferiors is the touchstone of greatness.

348. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (கூகூ-எ)

க - ரை. தனக்குத் தீமை செய்தார்க்கும் தான் நன்மை செய்யாவிடின், தன் பெருந்தன்மையால் பயனென்ன ?
Of what avail is greatness if one does not return good for evil?

349. இன்மை ஒருவற் கிளிவன்று, சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். (கூகூ-அ)

க - ரை. வறுமையும் இழிவாகாது, பெருந்தன்மை மாத்திரம் இருந்தால்.
If one has greatness, poverty is no disgrace.

350. ஊழி பெயரினும் தாம்பெயரார், சான்றாண்மைக்
காழி எனப்படு வார். (௯௯-௯)

க - ரை. குணக்கடலின் கரைபோல்வார், ஊழி பெயரினும் தம் நிலை பெயரார்.

The truly great will not swerve form their path even if the whole world should change its order.

351. அரம்போலும் கூர்மைய ரேனும், மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (௱-௭)

(அதி-பண்பு உடைமை) க - ரை. கூரிய மதியிருந்தும் மனுஷத்தன்மை இல்லாதவர், மனிதரல்லர், மரமே. பண்பு-பிறரிடத்து ஒழுகும் முறைமை.

Who are not humane are like trees, even if their intellects be sharp.

352. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம், நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. (௱-௰)

க - ரை. பண்பில்லாதவனிடத்துள்ள பெருஞ் செல்வம், பாத்திரத்தின் கேட்டால் திரிந்த பால்போல, பயன் படாது.

The vast riches of the ill-behaved man will be of no use, like milk spoiled by the foulness of the can.

353. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் இல். (௱௧-௫)

(அதி-நன்றியில்செல்வம்) க - ரை. பிறர்க்குக் கொடாது தாமும் அனுபவியார் செல்வம், எவ்வளவாயினும் பயனில்லை. துய்த்தல்—அனுபவித்தல் ; அடுக்கிய கோடி-பலகோடி.

The wealth of the millionaire who neither gives to others nor enjoys himself, is as good as non-existent.

354. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. (௲க-அ)

க-ரை. உலோபியின் செல்வம் ஊர்நடுவே எட்டி மரம் பழுத்தது போலும். நச்சப்படாதவன்-விரும்பப்படாதவன்; நச்சு மரம்-நஞ்சு மரம்.

The wealth of the miser is like a poison-tree burdened with fruit in the middle of the village.

355. அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை? (௲உ-ச)

(அதி-நாண் உடைமை) க-ரை. நாணம் உடைமை பெரியோர்க்கு ஆபரணம்; அஃது இல்லாது பெருமை பாராட்டுதல், பார்ப்பவர்க்குக் கண்ணோயாம். நாண்-தகாததைச் செய்யக் கூசுதல்; பீடு-பெருமை.

Modesty adorns the great; without it, their forwardness would be an eyesore to others.

356. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார், நாணுக்
குறைபதி என்னும் உலகு. (௲உ-ரு)

க-ரை. தமக்கோ பிறர்க்கோ பழிவருவதை அஞ்சுவாரைப் பெரியோர் புகழ்வர். பதி-ஊர், இடம்.

Who fear evil to themselves and to others are praised of the great.

357. நாணால் உயிரைத் துறப்பர், உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். (௲உ-எ)

க-ரை. பொருள் வெளிப்படை. (See 339)

The honorable will give up life for honour and not honour for life.

358. "குடிசெய்வல்" என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (௱௩-௩)

(அதி-குடிசெயல் வகை-பிறந்த குடியை உயர்த்தும் விதம்) க - ரை. "என் குடியை உயர்த்துவேன்!" என்று முயலுவோனுக்கு, தெய்வமும் முன்வந்து உதவும். மடிதற்று-ஆடையை இறுக உடுத்து.

Heaven hastens to help those who endeavour to elevate their family (prestige).

359. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (௱௩-௫)

க - ரை. சுற்றம்-பந்துக்கள். பொருள் வெளிப்படை.

Who blamelessly strives to upraise his family is beloved of the world.

360. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை. (௱௪-௧)

(அதி-உழவு) க - ரை. உழுதொழிலின் வருத்தத்துக்குப் பயப்பட்டுப் பிறதொழில்களைச் செய்து திரிவாரும், உணவின் பொருட்டு, உழுவாரையே அடைய வேண்டும்; ஆதலால், வருத்தம் தருவதாயினும், உழவே சிறந்த தொழில். உழத்தல்-வருந்துதல்.

All other industries depend on agriculture, which is therefore the noblest profession.

361. உழுவார் உலகத்தார்க் காணி; அஃது ஆற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து. (௱௪-௨)

- ரை. மற்றெல்லோர்க்கும் ஊண் உதவிக் காத்தலால்,

உழுவாரே உலகத்தார்க்கு அச்சாணி போல்வர். ஆற்றாது- செய்யமாட்டாது.

The tillers are the mainstay of the world, for they feed and support all the rest.

362. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (௱௩௪-௩)

க - ரை. பொருள் வெளிப்படை.

Who live by tilth, truly live, and are their own masters ; the rest serve and wait on them.

363. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது,
கைசெய்தூண் மாலை அவர். (௱௩௪-௫)

க - ரை. தாமே உழுதுண்டு வாழ்பவர், ஒரு நாளும் யாசியார்; யாசிக்கும் பிறர்க்கு ஒளியாது கொடுப்பர். கரத்தல்-ஒளித்தல் ; ஊண்-உண்ணும் ; மாலை-தன்மை.

The tillers never beg, but they readily give.

364. செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும். (௱௩௪-௬)

க - ரை. உடையவன் கவனித்துப் பேணாவிடின், மனைவி ஊடுதல் போல, நிலமும் ஊடி, போகம் மறுக்கும்.

A field and a wife yield not to a husband-man who is neglectful.

365. இன்மை எனஒரு பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி வரும். (௱௫-௨)

(அதி - நல்குரவு-வறுமை) க - ரை. தரித்திரனுக்கு இப்பிறப்பினும் மறுபிறப்பிலும் இன்ப மில்லை.

The poor have no happiness in this world or in the next.

366. நல்குர வென்னும் இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். (ளுரு-ரு)

க - ரை. தரித்திரம் என்னும் துன்பம் பல துன்பங்களுக்குக் காரணம். குறை-அசைச்சொல்.

Poverty is the cause of many other miseries.

367. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (ளுரு-சு)

க - ரை. ஏழை சொல் அம்பல மேறாது. நல்கூர்ந்தார்-தரித்திரர்.

Wisdom is weak in the mouths of the poor.

368. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது. (ளுரு-கூ)

க - ரை. தீயினுள் தூங்கினாலும் தரித்திரத்தில் தூங்க முடியாது. துஞ்சல்-கண்பாடு-உறக்கம்; நிரப்பு-வறுமை.

In the midst of fire you can sleep, but not in poverty.

369. இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. (ளுசு-ச)

(அதி-இரவு-அவமான மாகாத யாசகம்) க - ரை. மனமுகந்து கொடுப்பாரிடம் சென்று, தனக்கு அவமானமாகாத காரியத்தின் பொருட்டு யாசித்தல், தான் கொடுப்பதையே போலும். தேற்றாதார்-அறியாதார்; மாட்டு-இடத்தில்.

To beg of the generous-hearted for a just cause is like yourself giving.

370. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான். (௩௭௨)

(அதி-இரவச்சம்-அவமானமாகும் யாசகத்தை அஞ்சுதல்)

க - ரை. தான் படைத்த உயிர்கள் முயற்சியா லன்றிப் பிச்சை யெடுத்தேனும் பிழைக்கும்படி கடவுள் விதித்தா னென்னில், அந்தக் கொடிய கடவுளும், அவ்வுயிர்களைப் போலவே அலைந்து வருந்திக் கெடுவானாக.

If the Creator destined some to live even by beggary, may He wande[r] about and suffer like them!

371. தெண்ணீர் அடுபுற்கை யாயினும், தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில். (௩௭௫)

க - ரை. தன் உழைப்பால் கிடைத்தது கூழே யாயினும் அதுவே இனிய உணவு. தெண்ணீர்-தெள்நீர், தெளிந் நீர்; அடுதல்-சமைத்தல்; புற்கை-கூழ்; தாள்-முயற்சி ஊங்கு-மேல்.

Sweet is the gruel earned by the work of one's own hands.

372. ஆவிற்கு நீரென் றிரப்பினும், நாவிற்
கிரவின் இளிவந்த தில். (௩௭௬)

க - ரை. வாயில்லாப் பிராணியாகிய பசுவுக் கென்று விலை யொன்று மில்லாத தண்ணீரை யாசிப்பதும், நாவுக்கு மிக்க இழிவே. இளிவந்தது-இழிவானது.

The tongue is degraded even by asking for water for a (dumb) co[w]

373. அறைபறை அன்னர் கயவர், தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். (௩௮௬)

(அதி—கயமை—கீழோர் தன்மை) க — ரை. தாம் கேட்ட இரகசியங்களை ஊரெங்கும் சென்று தூற்றுதலால், கீழோர் பறை போல்வர். மறை—இரகசியம் ; உய்த்து—சென்று.
The foolish who cast abroad secrets are verily like the trumpet.

374. ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. (௱அ-எ

க - ரை. தம் தாடையை உடைப்பார்க்குக் கொடுப்பே யன்றி, கீழோர், தாம் உண்டு கழுவிய ஈரக்கையையும் எளி யார்க்கு உதறமாட்டார்.
The misers will not give except to those who slap their cheeks and extort from them.

375. சொல்லப் பயன்படுவர் சான்றோர், கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். (௱அ-அ

க - ரை. எளியார் தம் குறையைச் சொன்ன மாத்திரத் தில், மேலோர் உதவுவர் ; கீழோரோ, கரும்பைப்போல் தம்மை (வலியார்) நைய நசுக்கினாலன்றி உதவார்.
On hearing of distress, the generous give freely ; the misers have to be pressed hard like the sugar-cane to yield anything.

காமத்துப்பால்

காதல் இன்பத்தைப்பற்றிக் கூறுவது. (பால்—பகுதி)
இப்பகுதியில் வரும் குறள்கள், காதலர் காதலிகளின் கருத்துக்களைக் கூறுவன.

களவியல்

விவாகத்துக்குமுன் இரகசியமாக நடக்கும்
காதலின் வரலாறு.

376. பண்டறியேன் கூற்றென் பதனை, இனிஅறிந்தேன் :
பெண்தகையால் பேரமர்க் கட்டு. (௲௮-௩)

(காதலன் உரை) க—ரை. 'கூற்று' என்று கேட்டதன்றிக் கண்டதில்லை; இன்று கண்டறிந்தேன் : அது பெண் தன்மையது ; கண்களால் போர் செய்வது. பண்டு—முற்காலம் ; கூற்று—யமன் ; தகை—தகுதி ; அமர்—போர் ; கட்டு—கண்×து—கண்களை உடையது

Fatality's form I knew not before ; but now I know : it is a maiden with large, soul-subduing eyes.

377. உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. (௲௮-௧௦)

க—ரை. கள், குடித்தால் களிப்பைத் தரும் ; காமமோ, கண்டமாத்திரத்தில் மகிழச் செய்யும். அடுநறா—காய்ச்சியகள்.

Wine delights only when drunk ; love at mere sight. (See 387)

378. இருநோக் கிவள் உண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. (௲௧௦-௧)

க—ரை. இப்பெண்ணின் கண்களுக்கு இருவகைப் பார்வைகள் உள : ஒன்று, எனக்கு (காம) நோயைத் தருவது ; மற்றது (அவள் இணக்கத்தைக் காட்டுவதால்) அந்நோய்க்கு மருந்தாவது. உண்கண்—மையுண்டகண்.

This maiden has two looks : one pains, the other heals the pain.

379. யான் நோக்குங்காலை, நிலம் நோக்கும்; நோக்காக்கால்,
தான் நோக்கி, மெல்லநகும் (௱௯௪-௪)

க – ரை. பொருள் வெளிப்படை.

"I look on her: her eyes are on the ground the while;
I look away: she looks on me with timid smile." *G. U. Pope.*

380. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (௱௧௦-௧௦)

(போது) க – ரை. காதலரின் கண் குறிப்புக்கள் ஒத்துப் போனபின், வாய்ப்பேச்சுக்களால் சிறிதும் பயனில்லை.

When lovers' eyes agree, their words count not.

381. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (௱௧௧-௧)

(காதலன் உரை) க – ரை. பஞ்சேந்திரியங்களும் ஒரே காலத்தில் அனுபவிக்கும் இன்பம், இவளிடத்தேதான் உள. உயிர்த்து-மோந்து; உற்று-தொட்டு; ஒண்டொடி-பிரகாசமான வளையலை அணிந்தவள்; கண்-இடம்.

This maid alone can gratify at the same time all the five senses.

382. பிணிக்கு மருந்து பிறமன்; அணி இழை
தன்நோய்க்குத் தானே மருந்து. (௱௧௧-௨)

க - ரை. நோய் வேறு மருந்து வேறு யிருப்பது இயற்கை; இவளோ, தன்னால் விளையும் காம நோய்க்குத் தானே மருந்து. மன் - அசை; அணியிழை - அழகிய ஆபரணம் பூண்டவள்.

Disease and remedy are usually different; but this maid is herself the cure for the pain she causes.

383. உள்ளுவன் மன்யான் மறப்பின்; மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். (௱கஙஅ-ரு)

க – ரை. மறந்ததன்றோ மீண்டும் ஞாபகத்துக்கு வரும்; இவள் குணங்களை யான் மறந்தறியேனே. உள்ளுதல்-நினைத்தல்; மன்-அசை; ஒள்-ஒளி பொருந்திய; அமர்-போர். There is no *recalling* her excellences to my mind, for I never think of anything else.

கற்பியல்

விவாகமானபின் நிகழும் காதலின் வரலாறு.

384. செல்லாமை உண்டேல் எனக்குரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. (௱கரு௧-க)

(மனைவி உரை) க – ரை. போவதில்லையெனின் எனக்குச் சொல்; விரைவில் திரும்பி வருவதை, அதுவரை உயிரோடிருப்பார்க்குச் சொல்லிவிட்டுப் போ. வல்வரவு-சீக்கிரம் (திரும்பி) வருதல்.

Tell me if you are not going; as for your speedy return, tell it to them who will survive your separation.

385. தொடிற்சுடின் அல்லது, காமநோய் போல,
விடிற்சுடல் ஆற்றுமோ தீ? (௱கரு௬-௬)

க – ரை. ஆற்றுமோ - வல்லதோ. பொருள் வெளிப்படை.

Fire burns by contact; love by separation.

386. நாம்காதல் கொண்டார், நமக்கெவன் செய்பவோ
தாம் காதல் கொள்ளாக் கடை? (௱உ௦-ரு)

(மனைவி உரை) க-ரை. அவருக்கு என்மேல் காதல் இல்லையானால், அவர் மேல் காதல் கொண்ட எனக்கு அவர் என்ன செய்வார்?

I love but he does not; how can he help me?

387. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்,
கள்ளினும் காமம் இனிது. (ாஉக-க)

(பொது) க—ரை. குடித்த பின்பே மகிழ்ச்சியைத் தரும் கள்ளைவிட, நினைத்த மாத்திரத்தில் மகிழ்ச்சியைத் தரும் காமம், இனிது. (See 377)

Wine delights only when drunk; love at the very thought.

388. யாமும் உளேம்கொல் அவர் நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ உளரே அவர்? (ாஉக-ச

(மனைவி உரை) க—ரை. என் மனத்தில் அவர் எப்பொழுதும் இருப்பதுபோல், அவர் மனத்தில் நானும் இருக்கின்றேனோ?

He is ever in my mind: am I too in his mind, I wonder.

389. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து! (ாஉஉ-க)

(மனைவி உரை) க-ரை. பொருள் வெளிப்படை.

How can I adequately reward and feast the dream which has brought me his message.

390. காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி,
மாலை மலரும், இந் நோய். (ாஉரு-எ)

க - ரை. போது-மொட்டு ; மாலை-சாயங்காலம் ; நோய்: ாம நோய். பொருள் வெளிப்படை.

ove sprouts in the morning, buds all day, and blossoms forth in e evening.

391. காதல், அவர் இலராக, நீ நோவது
பேதைமை ; வாழி ! என் நெஞ்சு. (௱உ௫-உ)

க – ரை. அவருக்கோ நம்மேல் காதல் இல்லை ; அப்படி ிருக்க, என் நெஞ்சே, அவரை நீ நோவது பேதைமையே.

Ie loves us not : O foolish heart ! why blame him then, for not oming ?

392. உள்ளத்தார் காத லவராக, உள்ளிநீ
யாருழைச் சேறி என் னெஞ்சு ? (௱உ௫-௬)

க – ரை. என் நெஞ்சே ! நம் காதலர் மனத்தில் இருக்க, அவரைத்தேடி நீ எங்கே செல்கிறாய் ? உள்ளி-நினைந்து ; ழை-இடம் ; சேறி-செல்தி, போகிறாய்

My lover is within my mind : then O my heart ! to whom are you going ?

393. ஒருநாள் எழுநாள்போற் செல்லும், சேண் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. (௱உ௭-௬)

(மனைவி உரை) க - ரை. சேண்-நெடுந்தூரம். பொருள் வெளிப்படை.

One day is like seven, to the wife who keeps count of time and looks forward to the day of reunion.

394. எழுதும்காற் கோல்காணுக் கண்ணேபோல், கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. (௱உ௬-௫)

க-ரை. முன்காணும் அஞ்சனக்கோலை மைதீட்டும் போது கண் காணாததுபோல, கணவனை நேரில் கண்ட விடத்து அவன் குற்றங்களை நான் காண்கிலேன். கொண் கன்—கணவன்.

The eye sees not the brush while painting; I see not his fault when I see him.

395. காணுங்கால் காணேன் தவறாய; காணாக்கால்,
காணேன் தவறல் லவை. (ா௨கூ-சு)

க-ரை. பொருள் வெளிப்படை.

When I see him I see no faults; but when he leaves me alone, I see naught but fault.

396. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும், எவன் நெஞ்சே!
நீஎமக் காகா தது? (ா௩௦-க)

க-ரை. அவர் நெஞ்சு நம்மை நினையாது அவர் வசமே யிருக்க, நெஞ்சே! நீ மட்டும் எனக்கு அடங்காது அவரை நினைப்பதேன்?

Seeing that his heart is in his own keeping, why are you, O my heart, not so for me?

397. கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ, நெஞ்சேநீ,
பெட்டாங் கவர்பின் செலல்? (ா௩௦-௩)

க-ரை. தாழ்வடைந்தவரை நண்பர் கைவிடுவர் என்பார் கள்: அதுதானோ, நெஞ்சே! நீ என்னை விட்டு அவரை விரும்பிச் செல்லுகிறாய்? நட்டார்-சிநேகிதர்; பெட்டாங்கு— விரும்பியவாறு.

Adversity has no friend, they say: is that why, O my heart, that you forsake me and go after him?

398. துன்பத்திற் கியாரே துணையாவார், தாம்உடைய
நெஞ்சம் துணையல் வழி? (௱௩௰-௯)

க - ரை. கஷ்டகாலத்தில் தம் நெஞ்சே தமக்குத் துணையாகாவிடின், வேறு துணை ஏது?

If one's own heart forsakes one, what other friend can one have in trouble?

399. இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா;
கண்நிறை நீர்கொண் டனள். (௱௩௨-௫)

க - ரை. 'இப்பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் பிரியோம்' என்றேன். (மறுபிறப்பில் பிரிவேன் என்று நான் கூறியதாகக் கொண்டு) அழத்தொடங்கினாள்.

"We shall never separate in this life!" I said, and her eyes filled with tears, fearing that I thought of separation in the next.

400. உள்ளினேன் என்றேன்; மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். (௱௩௨-௬)

(கணவன் உரை) க - ரை. 'பிரிந்து சென்றிருந்த விடத்திலே உன்னை நினைத்தேன்' என்று சொன்னேன்; ஆயின், என்னை நினைத்தற்குமுன்பு மறந்தீரே என்று, அவள் என்னைச் சினந்தாள். புல்லல்-தழுவுதல்; புலத்தக்கனள்-புலந்தாள்.

"I remembered you there," I said. "That means you had forgotten me?" she retorted, and was angry.

குறள் நானூறு

பாட்டு முதற்குறிப்பு அகராதி

அகரமுதல	1	அழிவந்த	296	ஆக்கம்கருதி	193
அகலாதணு	266	அழுக்கா	69	ஆக்கமுங்	248
அகழ்வாரை	63	அளவறிந்	200	ஆவிற்குநீரெ	372
அகன்அமர்	37	அளவின்	113	ஆற்றின்	199
அச்சமுடை	218	அறங்கூ	72	இடிக்கும்	186
அஞ்சாமையல்	208	அறஞ்சொல்	74	இடிப்பாரை	187
அஞ்சாமையீ	148	அறத்தாற்றி	15	இடுக்கண்ப	254
அஞ்சுவதஞ்	177	அறத்தான்	13	இடுக்கண்	244
அடுக்கியகோ	331	அறத்திற்கே	32	இதனை இதனு	2[illegible]
அடுக்கிவரினு	246	அறத்தினூ	9	இம்மைப்பி	[illegible]
அடுத்தூகா	270	அறனறிந்து	183	இரத்தலும்	[illegible]
அணியன்றோ	355	அறன்ஆக்கம்	67	[illegible]	[illegible]
அந்தணர்	7	அறன்ஈனு	281	இரவார்	363
அமிழ்தினு	24	அறன்என	16	இருநோக்கி	378
அரங்கின்றி	160	அறன்வரை	62	இருமனப்	318
அரம்போலு	351	அறிவினு	127	இருவேறு	[illegible]
அருட்செல்	93	அறிவின்மை	305	இலன்என்று	[illegible]
அருமையு	238	அறிவுடையார் ஆ	176	இல்லதென்	[illegible]
அருவினை	202	அறிவுடையார் எ	178	இல்லாரை	[illegible]
அருளில்லார்	95	அறைபறை	373	இல்லாளை	[illegible]
அருளொன்	282	அற்றாலளவறி	328	இழிவறிந்	31[illegible]
அருள்சேர்	94	அன்பகத்தில்	33	இழுக்கலு	185
அல்லற்பட்	225	அன்பிலார்	31	இளைதாக	314
அவர்நெஞ்	396	அன்பின்வழி	35	இறுதிபய	265
அவாஇல்லா	144	அன்புநாண்	345	இனியஉள	41
அவிசொரிந்	99	அன்பும்அறனு	14	இன்சொல்	40
அவ்வித்தழு	68	அன்றறிவாம்	12	இன்பத்துள்	308

இன்மைஎ	365	உறின்நட்ட	297	ஒருநாள்	393
இன்மையொ	349	உறுபசியு	277	ஒல்லும்	10
இன்னாசெயா	126	உற்றநோய்	101	ஒழுக்கம் உ	59
இன்னாசெ—ர்	348	ஊக்கம்	203	ஒழுக்கமும்	330
இன்னாஎன	128	ஊதியம்	294	ஒழுக்கம்விழு	57
…ர்ங்கைவி	374	ஊருணி	86	ஒறுத்தாற்	64
…ன்றபொ	29	ஊழிபெய	350	ஒற்றொற்றி	232
…ன்றாள்மு	319	ஊழையும்	243	ஒன்றா உலக	90
…ன்றாள்பசி	255	எண்ணித்து	195	ஒன்றெய்தி	325
…டம்பாடி	313	எண்ணியவெ	257	ஓதி உணர்ந்	302
…க்கை	290	எண்ணென்	153	கடல் ஓடா	207
…டசெல்	327	எண்பொ	175	கடன் அறிந்	264
க…யர்	233	எந்நன்றி	48	கடும் சொ	226
…ண்டார்க	377	எப்பொருள்யா	174	கணைகொடி	109
…ண்ணாது	66	எப்பொருள்எத்	142	கண்டுகேட்	381
…ருவுகண்	258	எய்தற்கரிய	204	கண்ணிற்க	229
…க்தோ	60	எரியாற்சுட	316	கண்நின்று	73
vith te…த்	155	எல்லார்க்கு	54	கண்ணுடை	154
400…ண்டு	362	எல்லாவிள	119	கண்ணொடுக	380
…ரு	361	எழுதுங்கா	394	கண்ணோட்ட	227
…ரன்னு	162	எனைத்தானும்	171	கருமம்	231
…ரத்தார்	392	எனைத்திட்	260	கல்லாத	161
தி…ளத்தானு	111	என்றும் ஒரு	253	களவினால்	112
…ள்ளத்தாற்	116	ஏதிலார் ஆ	303	களித்தானை	322
…ள்ளமுடை	234	ஏதிலார்குற்	76	கள்ளுண்ணா	323
உள்ளினும்	387	எவவும்	307	கறுத்தின்னா	125
உள்ளினே	400	ஐயப்பட	267	கற்ககசடற	152
உள்ளுவன்	383	ஒட்டார்	338	கற்றதனா	2
உறங்குவது	138	ஒப்புரவினு	87	கற்றறிந்தார்	271

கற்றுருட்	272	கெடுப்பதூஉ	5	செல்வத்துட்	167
கற்றார்முன்	274	கெடுவல்யா	50	செவிகைப்ப	151
கற்றிலன்	169	கெட்டார்க்	397	செவிக்குண	168
கனவினும்	298	கேடில்விழு	159	செவியிற்சு	173
காக்கபொரு	53	கேட்டார்ப்	249	சொலல்வல்	251
காக்கைகரா	217	கேட்டினும்	293	சொல்லுக—லி	80
காட்சிக்கெ	149	கையறியா	320	சொல்லுக—லை	250
காணுங்கால்	395	கொக்கொக்	205	சொல்லுதல்	256
காதலர்தூ	389	கொடுத்தலும்	216	சொல்லப்ப	375
காதல் அவரி	391	கொடுப்பதூ	353	தக்காரின	18
காமம்வெகு	143	கொல்லாநல	346	தந்தைமகற்	
காலத்தினு	42	கொல்லான்	100	தம்மில்பெரி	
காலைஅரும்	390	கொன்றன்ன	47	தம்மில்தம்	
கானமுய	284	சமன்செய்து	51	தலையின் இழிந்	
குடம்பை	137	சால்பிற்கு	347	தவம்செய்	
குடிசெய்வ	358	சிறப்பீனும்	8	தற்காத்துத்	
குடிதழீஇ	220	சிறுமையல	326	தனக்குவமை	
குடிப்பிறந்தா	332	சிறைகாக்கு	22	தன்குற்றம்	
குடிப்பிறந்து	292	சிற்றின்ப	71	தன்னுயிர்க்கின்	
குடியென்னும்	236	சுடச்சுட	103	தன்னுயிர்தா	
குணநலம்	344	சுழன்றும்	360	தன்னுயிர்நீ	
குணம்நாடி	209	சுற்றத்தால்	215	தன்னூன்	
குழல்இனிது	26	செப்பின்	312	தன்னெஞ்சறி	11[illegible]
குறிப்பிற்—ரா	269	செயற்கரிய	6	தன்னைத்தான் த	85
குறிப்பிற்—ர்	268	செய்கபொ	283	தன்னைத்தான்	124
குற்றம் இல	359	செய்தக்க	194	தாமின்புறு	158
குன்றின் அனை	336	செல்லாமை	384	தாளாண்மை	239
கூழும்குடியு	224	செல்லான்	364	தினைத்துணை	44
கூற்றத்தை	315	செல்லிடத்து	121	தினைத்துணை	179

[illegible]D AND PUB[illegible]
PRESS AND PUBLISHING-HOUSE, MYLAPORE,

தீயவைசெய்	84	நாச்செற்று	135	பலசொல்ல	25[illegible]
தீயவேதீய	81	நாடாதுந	291	பலநல்ல	2[illegible]
சீயினுறல்	56	நாள்தொறு	223	பல்லவை	276
ஞ்சினுர்	321	நாணுலு	357	பல்லார்ப	188
நன்பத்திற்	398	நிலத்தியல்	189	பல்லார்மு	77
துன்பமுற	259	நிலத்திற்	333	பற்றற்ற	214
தூங்குக	261	நில்லாதவ	134	பற்றுக	141
தெண்ணீர்	371	நிறைநீர	285	பிணிக்கு	382
தெய்வத்தா	242	நுணங்கிய	172	பிணியின்	278
தரிந்த	192	நுண்மா	163	பிறப்பொக்	340
ரான்	211	நெஞ்சில்	107	பிறர்க்கின்	130
ாடிற்சுடி	385	நெடுநீர்மற	237	பிறர்பழியு	356
ாட்டனே	156	நெடும்புன	206	பிறன்பழி	75
ன்றில்	91	நெருப்பினு	368	பீலிபெய்	198
ற	287	நெருநல்	136	புகழின்றுல்	337
யும்	123	நோயெலா	131	புகழ்பட	92
ப்பட்டா	354	பகல்வெல்	201	புணர்ச்சி	288
ரவெ	366	பகுத்துண்	132	புறத்துறுப்	34
லார்கண்	164	பகைபாவ	61	புறந்தூய்	118
லாநெறி	89	பகையகத்	273	பெண்ணில்	20
லினத்தி	191	படுபயன்	70	பெரிதினிது	304
லதொறு	286	படைகுடி	147	பெரியாரை	314
றற்பொரு	367	பணியுமாம்	342	பெருக்கத்து	334
ன்றுங்கா	146	பணிவுடை	39	பெருமைக்கு	210
ன்றுற்ற	196	பண்டறியே	376	பெருமைபெ	343
ன்றிக்கு	58	பண்ணென்	228	பெறுமவற்	23
ன்றிமறப்	46	பண்பிலான்	352	பேதைமை	301
ன்றேதரி	49	பயனில்சொல்	78	பொருள்தீ	79
ாம்காதல்	386	பயன்தூக்	43	பொருள்கரு	262

279 மிகுதியான் 65 வறியார்க் 88
98 முகத்தின் 300 வாணிக 52
241 முகம்நக 289 வாய்மை 114
30 முடிவும் 263 வாளொடெ 275
25 முயற்சி 240 வாள்போல் 311
230 முறைசெய் 150 வானுயர்தோ 106
7 மேல்இருந் 341 வானோக்கி 21
339 மேற்பிறந்தா 165 விண் இன் 4
295 மோப்பக்கு 38 வியவற்க 18
110 யாகாவா 55 விருந்து 36
122 யாதனின் 139 விலங்கொடு 166
82 யாதானும் 157 வில்லேர் 30
45 யாமும் 38 வினைக்குரி 21
108 யாமெய் 120 வினைவலி 19
11 யான்என 140 வெண்மை 30
117 யான்நோக் 379 வெள்ளத்தனைய 23
190 வஞ்சமன 105 வெள்ளத்தனையஇ 2
17 வருமுன் 180 வேண்டற்க 3
18 வலியார் 96 வேல்அன்று
வேலொடு

ED AND PUBLISHED BY A. MADHAVIAH AT THE
PRESS AND PUBLISHING-HOUSE, MYLAPORE, MAD

மறைமலையடிகள் நூல்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1